

# அருள்வாக்கி

## அப்துல் காதிர் புலவர்

# நினைவு மலர்

Des: Jabbar Ali

நிமிட வித்துவான் அருள்வாக்கியின் நினைவுப் பேருரை – 2021


**வெளியீடு:**

தெல்தோட்டை ஊடக மன்றம்

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை ஏற்பாட்டுக் குழு.

# அருள்வாக்கி
## அப்துல் காதிர் புலவர்
# நினைவு மலர்

### நிமிட வித்துவான் அருள்வாக்கியின்
### நினைவுப் பேருரை – 2021


**வெளியீடு:**

தெல்தோட்டை ஊடக மன்றம்

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை ஏற்பாட்டுக் குழு

தலைப்பு : அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவு மலர்

நிகழ்வு : நிமிட வித்துவான் அருள்வாக்கியின் நினைவுப் பேருரை – 2021

பதிப்பு : ஆகஸ்ட் 30, 2021

வெளியீடு : தெல்தோட்டை ஊடக மன்றம்

ஏற்பாட்டுக் குழு : **அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்**
**நினைவுப் பேருரை ஏற்பாட்டுக் குழு.**

மின்னஞ்சல் : dmfoundation2021@gmail.com

# பதிப்புரை

ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியத் துறைக்குப் பங்களிப்புச் செய்தவர்களில் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கு கணிசமான பங்கு உண்டு. அவர் இறையருளும் நல்லிசைப் புலமையும் கொண்ட நிமிட வித்துவானாவார். அத்துடன் அவர் இலக்கிய உலகுக்கும் பிறந்த மண்ணுக்கும் ஆற்றிய நிகரில்லா சேவையினை மக்கள் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்துவது இந்த மண்ணில் பிறந்த எம் அனைவரதும் கடமையாகும். அந்த நன்நோக்கில் தெல்தோட்டை ஊடக மன்றத்தின் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை ஏற்பாட்டுக் குழுவினால் இம்மலர் வெளியிடப்படுகிறது.

உலகப் புகழ் கவிஞராக கட்டுண்டு விடாது பன்னிலை வகிபாகங்களையும், பன்முக ஆளுமையையும் கொண்டவராகத் தீப சித்தி அருள்வாக்கி அவர்கள் திகழ்ந்தார். அவர் ஒட்டு மொத்த சமூகத்துக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கிய ஓர் அற்புதப் புலவராவார். தனது கவிபாடும் வல்லமையினால் தமிழ் பேசும் சமூகத்தின் மத்தியில் ஒரு நிலையான இடத்தைத் தக்கவைத்துக் கொண்டார்.


நிமிடமதில் கவிபாடும் ஆற்றல் மிக்க புலவர் கண்டி மாநகரில் பலர் முன்னிலையில் தன் பாட்டாலே விளக்கெரியச் செய்து பாட்டாலே விளக்கை அணையச் செய்து தனது கவிப்புலத்தையும், இறையச்சத்தையும் இம் மண்ணில் வித்திட்டுச் சென்றார். இவ்வாறு பாட்டால் தீபத்தை எரியச் செய்ததன் காரணமாக "தீப சித்தி" என்ற நாமம் பெற்றார். அட்டாவதானம், தசாவதானம், சதாவதானம் என்ற தன் புகழ் நாமங்களை விட "தீப சித்தி" எனும் நாமம் அவரின் கவிபாடும் வல்லமையினை இவ்வுலகிற்குப் பறை சாற்றுகின்றது.

புலவராற்றிய செம்பணியினை இளம் சமூகத்தினர் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்தல், தமிழ் இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பணியினை மெச்சுதல் என்ற உயர்ந்த சிந்தனையுடன் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரையினை நிகழ்த்திய பேராசிரியர் (கலாநிதி) எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுக்கும், புலவர் பற்றிய குறிப்புகள் மற்றும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றம் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது. இம்மலர் சிறப்பாக வெளிவர மனமுவந்து பங்களிப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்து நிற்கின்றோம்.

கவியரங்கம் தோறும் கவிமழை பொழிந்து அருள்வாக்கிப் புகழ் மாலை அணிந்த புலவர் மலையின் அணையா விளக்கு என்றும் எம் மனங்களில் ஒளி வீச இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

**தெல்தோட்டை ஊடக மன்றம்**



## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | வாழ்த்துரைகள் | 03 |
| 3. | நினைவுப் பேருரை | 29 |
| 4. | பேருரையாளர் பற்றி | 45 |
| 5. | கௌரவிக்கப்படுபவர் பற்றி | 47 |
| 6. | மனப்பதிவுகள் | 50 |
| 7. | சுவடிகள் | 56 |



# 01

# அறிமுகம்

# அறிமுகம்

தெல்தோட்டை பிரதேசத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட எமது தெல்தோட்டை ஊடக மன்றத்தின் முதலாவது நிகழ்வாக நிமிட வித்துவான் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் 155வது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த நினைவுப் பேருரை நிகழ்வை ஏற்பாடு செய்து நடாத்துவதில் நாம் பேருவகையும் பெருமிதமும் அடைகிறோம்.

நாம் இந்த நிகழ்வை எமது ஊரான தெல்தோட்டையில் ஒரு சிறு குழுவினரை ஒன்றுசேர்த்து நடாத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டாலும் இறையருளால் பின்னர் அது நாடு தழுவிய ஒரு தேசிய நிகழ்வாக பரிணமித்து இன்று உலகம் தழுவிய ஒரு சர்வதேச நிகழ்வாக நடாத்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

எமது தெல்தோட்டைப் பிரதேசம் மிக நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு பிரதேசமாகும்.

நம் நாட்டின் எழிலைக் கண்டு மயங்கிய அரேபியர் பூமியின் பூஞ்சோலை இது என்றனர். எமதூரின் எழிலை அழகை வனப்பை ஒற்றை வார்த்தையில் சொன்னால் நம் நாட்டின் பூஞ்சோலை எமதூர் தெல்தோட்டை என்பேன்.

இயற்கை எழில் கொஞ்சும் மத்திய மலை நாட்டின் தலைநகர் கண்டி மாநகரிலிருந்து பேராதனை – கலஹா வீதியூடாக சுமார் 36 கி. மீ. பயண தூரத்தில் அமைந்துள்ள நாற்புறமும் அழகிய மலைத் தொடர்களால் சூழப்பட்ட அழகிய பிரதேசமே தெல்தோட்டையாகும். அவற்றிற்கிடையேயிருந்து ஊடுறுவி சலசலவென பாயும் சிற்றருவிகள், பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் மலைகளைப் போர்த்தியிருக்கும் தேயிலைச் செடிகள், பசிய வயல் வெளிகள் என்பன எமது ஊருக்கு அழகு சேர்க்கும் இறைவனின் கொடைகளாகும். இது ஆரம்ப காலத்தில் பட்டியகாமம் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. தெல்தோட்டை பிரதேசம் சுமார் 09 முஸ்லிம் கிராமங்களையும் பல தமிழ், சிங்கள கிராமங்களையும் உள்ளடக்கிய மூவின மக்களும் தொன்றுதொட்டே ஒற்றுமையோடும் பரஸ்பர புரிந்துணர்வோடும் வாழும் ஒரு பிரதேசமாகும்.

ஆரம்ப காலந்தொட்டே எமது பிரதேசத்தவர்கள் கல்வி, கலை, கலாசார, சமூக, அரசியல் ரீதியாக இந்நாட்டிற்கு தமது பங்களிப்புகளை வழங்கி வருகிறார்கள். அதன் விளைவாக பல ஆளுமைகளை எமது ஊர் நாட்டிற்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. அவர்களுள்

மிகப் பிரதானமானவரே இன்று நாம் நினைவு கூறும் நிமிட வித்துவான் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். அன்னாரது பங்களிப்புகள் கலை, கலாசாரம், ஆன்மீகம், கல்வி என விரிந்து செல்கின்றன.

எனவே அன்னாரது பங்களிப்புகள் குறித்து இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டியிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் அப் பணியை – ஏற்கனவே அம்முயற்சியில் ஈடுபட்டிருப்போருடன் இணைந்து முன்னெடுக்க எமது தெல்தோட்டை ஊடக மன்றம் எதிர்ப்பார்க்கிறது.

குறிப்பாக எமது முதுசங்களே எமது வரலாறு என்ற அடிப்படையில் அன்னார் பற்றிய விரிவானதொரு பார்வையை எமது இளம் சமூகத்தினர் மத்தியில் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.

அவ்வாறே எமது ஊரின் வரலாறு இன்னும் முறையாகத் தொகுக்கப்படாமல் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கிறது. அது தொகுக்கப்பட்டு நூலுருபடுத்த வேண்டியது காலத்தின் அவசியத்தேவை. எனவே அப்பணியையும் முன்னெடுக்கவுள்ளோம்.

அதேபோல் ஆரம்ப காலம் தொட்டே கல்வியில் ஆர்வமுள்ள மாணவர் சமூகமொன்று எமது தெல்தோட்டைப் பிரதேசத்தில் உள்ளது. அதற்குரிய சரியான வழிகாட்டலும் திசைமுகப்படுத்தலும் குறைவாக இருக்கிறது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு எமது ஊடக மன்றம் வழி சமைக்கும்.

அவ்வாறே தொன்றுதொட்டே எமது பிரதேசம் கலை, இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு காட்டிய ஒரு பிரதேசமாகும். ஆனால் தற்பொழுது கலை, இலக்கியம் சார்ந்த செயற்பாடுகள் குறைந்து தூர்ந்து போய் உள்ளது. அவற்றை மீள உயிர்ப்பித்து எமது பிரதேசத்தில் ஆரம்ப கால கட்டத்தில் இருந்த கலை, இலக்கிய செயற்பாடுகளுக்கு உர மூட்டுவதற்கும் எமது தெல்தோட்டை ஊடக மன்றம் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எனவே இப்பணிகளில் சகலரும் ஒன்றிணையுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

**சி.எம்.எம்.சுபைர்,**
தலைவர்,
தெல்தோட்டை ஊடக மன்றம்.

# 02

# வாழ்த்துரைகள்



# ஆய்வு செய்பவர்களுக்கு சிறந்ததொரு இலக்கிய மீளாய்வு "அருள்வாக்கி" எனும் நூல்

வித்துப சிரோன்மணி அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரது 155ஆவது அகவையை ஞாபகமூட்டும் வகையில் தெல்தோட்டை ஊடக மன்றத்தினர் இன்று (30.08.2021) அவரது நினைவு தின நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருப்பதையிட்டு உளப்பூரிப்படைகின்றேன். இந்நிகழ்வில் 94 வயதை கடந்துவிட்ட என்னையும் கௌரவிப்பதற்காக அழைக்கப்பட்டிருப்பதையிட்டு என் மனது மென்மேலும் புளகாங்கிதமடைகின்றது. "மாஷா அல்லாஹ்".

நான் 1965ஆம் ஆண்டு வித்துபதீப மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்ட போது பாடசாலையை அண்மித்திருந்த ரம்மியமான மலைத்தொடரை மக்கள் புலவர் மலை என அழைத்தனர். புலவர் மலை என்ற சொல் என் மனதில் ஒரு சலனத்தை (அசைவை) ஏற்படுத்தியது. அன்று முதல் ஏன் இம்மலைக்கு இக்காரணப்பெயர் சூட்டப்பட்டது? என விசாரிக்கத் தொடங்கினேன். இது அப்துல் காதிர் புலவர் பிறந்து வளர்ந்த மலை என அறியக் கிடைத்தது. இவர் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பை மதிக்கும் வகையில் இவருக்கு நூற்றாண்டு விழாவொன்றை நடத்த வேண்டுமெனத் தீர்மானித்தேன். அதன் படி 30.08.1965ஆம் ஆண்டு இவ்விழா எனது தலைமையில் வித்துபதீப மகா வித்தியாலயத்தில் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது.

தொடர்ந்து இவர்பற்றிய வரலாறுகளை தொகுத்தெழுத வேண்டுமென்ற அவா எனக்குள் ஏற்பட்டது. இதற்காக துள்ளியமான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தெல்தோட்டை பகுதியைச் சேர்ந்த முக்கியமான பலரை அனுகினேன். அவர்களுள் புலவரின் பேரரான மர்ஹூம் T.N. அல்லா பிச்சை அவர்கள் ஆதார பூர்வமான ஏராளமான தகவல்களை வாய்மூலமாகவும் எழுத்து வடிவிலும் தந்துதவினார். அவர்களை வல்ல அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக. மற்றும் கொழும்பு, திஹாரி, பாணந்துறை பகுதியைச் சேர்ந்த சிலரும் தகவல்களைத் தந்துதவினர். என்னிடமிருந்த கையெழுத்துப் பிரதியை ஒரு புத்தகமாக வெளியிடுமாறு கவிஞர் M.C.M. சுபைர் அவர்கள் ஆலோசனை கூறி ஆக்கமும் ஊக்கமுமளித்தார்.

1973ஆம் ஆண்டு எனது கையெழுத்துப் பிரதி "அருள்வாக்கி" என்ற பெயரில் அச்சிட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது அல்ஹம்துலில்லாஹ்.

தொடர்ந்து நான் புலவரைப் பற்றிய செய்திகளை நாடளாவிய ரீதியில் ஜனரஞ்சகப் படுத்துவதற்காக தினபதி, சிந்தாமணி போன்ற செய்திப் பத்திரிகைகளிலும் சில சஞ்சிகைகளிலும் எழுதி வந்ததுடன் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் இடைக்கிடையே உரைகளை நிகழ்த்தி வந்துள்ளேன். 1980ஆம் ஆண்டிலிருந்து பல நேயர்கள் இப்புத்தகத்தைக் கேட்டு என்னைத் தொடர்புகொண்டனர். எனவே 1989ஆம் ஆண்டு இப்புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு “அருள்வாக்கி அப்துல் காதர்” என்ற பெயரில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நான் கடுஞ்சிரமப்பட்டு இப்புத்தகத்தை எழுதியதன் பெறுமதியை தற்பொழுது தான் உணர்கின்றேன். பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் கூட எனது புத்தகத்தை தம் இலக்கிய ஆய்வுக்காக தெரிவுசெய்து வருகின்றார்கள் என்ற தகவல் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்களது 155ஆவது நினைவு தின நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்துள்ள தெல்தோட்டை ஊடக மன்றத்தினருக்கு எனது நிறப்பமான பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாவதாக! இம்மன்றம் தொடர்ந்தும் இலக்கியப் பணியாற்ற வல்ல அல்லாஹ் அருள்பாளிப்பானாக ஆமீன்.

S.M.A. **ஹசன்,**
ஓய்வு பெற்ற பிரதம கல்வி அதிகாரி,
ஹீரெஸ்ஸகல, கண்டி.
30.08.2021.

*சந்தத் திருப்புகழ் விருத்தம்*

*திருவளர் ஞானம் மேவும் செழும்பர கதியிற் சேர்க்கும்*
*குருபரன் அருளை ஊட்டும் கோதிலா நிதி உண்டாக்கும்*
*கருவலர் முஹம்மதென்னக் கோன் கருணை உண்டாம் எந்நாளும்*
*தெருளமைந்து உயர்ந்த சந்தத் திருப்புகழ் படிப்போர்க்கன்றே*

# அரை நூற்றாண்டுக்குப் பின் ஈழம் முழுவதும் புலவரின் புகழ் ஓங்கி ஒலிப்பதை கண்டு அகமகிழ்ச்சி...!

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் கண்டி தர்கா, வித்துவான், அட்டாவதானி, வித்துவ தீபம் என்னும் புகழ்ப் பெயர்களையும் கொண்டவர். கண்டிக்கு அண்மையிலுள்ள பட்டியகாமம் போப்பிட்டியவில் பிறந்தவர்.

அருள்வாக்கியை எனக்கு அறிமுகப்படுத்தியவர் அதே ஊரைச் சேர்ந்த டி.என். அல்லா பிச்சை என்னும் நண்பர் ஆவார். அவர் காவல் துறையில் பணியாற்றினார். நெருங்கிய நண்பராகி அருள்வாக்கி பற்றிய தகவல்களை அவ்வப்போது தந்தருளினார். அவற்றினை எனது இளம்பிறை என்னும் மாசிகையில் பிரசுரித்து வந்தேன்.

1966இல் அவரது நூற்றாண்டு வரவிருந்ததால் 1965 இளம்பிறை மாசிகையை ஏராளமான தகவல்களுடன் அருள்வாக்கி மலர் என்று வெளியிட்டேன். அது பெரும் பேசுபொருள் ஆகியது. அப்போதைய அமைச்சர் குமாரசூரியர் எனக்கு அறிமுகமானவர். அவர் மூலம் அருள்வாக்கி நூற்றாண்டுக்கு முத்திரை வெளியிட வேண்டுமென கோரிக்கை வைத்தேன். அப்போது எனது முற்போக்கு நண்பர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் முத்திரை வெளியிடப்படவில்லை. அந்த விவகாரத்தை இங்கு நான் விவரிக்க விரும்பவில்லை.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் தமிழ், ஆங்கிலம், அரபு ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த பேரறிஞர் ஆவார். இயற்கையாகவே அருட் கவிபாடும் திறன் படைத்தவர்.

ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழம் முழுவதும் அவர் புகழ் ஓங்கி ஒலிப்பதைக் கண்டு மிக மிக மகிழ்கிறேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் இதைக் கண்டு களிக்கும் பேரானந்தம் எனக்குக் கிட்டியுள்ளது.

அவர் 30க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியதாகத் தெரிகிறது. அவற்றில் மிகச் சிலவே நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளன. அவர் யாழ்ப்பாணத்துக் கவிஞர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். ஆறுமுகநாவலருடன் அவருடைய நட்பு குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலும் ஏராளமான புலவர்களுடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

இன்று அவருக்காக விழா எடுத்துக் கொண்டாடும் நண்பர்களுக்கு என் அன்பையும் ஆனந்தத்தையும் அர்ப்பணிக்கின்றேன்.

**இளம் பிறை எம்.ஏ.ரஹுமான்**

# அருள்வாக்கியை மக்கள்மயப்படுத்த திட்டமிட்டு செயற்பட வேண்டும்

ஈழத்துத் தமிழ் இஸ்லாமிய இலக்கியத்தில் கொடு முடி எனப் போற்றப்படும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்களின் நினைவுப் பேருரையை நடாத்த முன்வந்திருக்கும் தெல்தோட்டை ஊடக மன்றத்தினருக்கு முதலில் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்துல் காதிர் புலவர் ஒரு பெரும் புலவர். தமிழ் இலக்கிய உலகில் இம்மாபெரும் புலவர் உரிய கவனிப்பைப் பெற வேண்டும் என்ற நோக்குடனேயே 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஞானம் இதழை அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நூற்றாண்டுச் சிறப்பிதழாக வெளியிட்டோம்.

அருள்வாக்கி புலவர் பற்றிய அதிக தகவல்களைக் கொண்ட ஆவணமாக இந்த சிறப்பிதழ் அமைந்தது. இந்த சிறப்பிதழிலே அருள்வாக்கியுடைய 12 நூல்களைத் தேடிப் பெற்று இணைத்திருக்கின்றோம். அத்தோடு அவர் எழுதிய 40க்கும் மேற்பட்ட நூல்களின் பட்டியலையும் தந்துள்ளோம். அவர் பாடிய பதங்கள், சிறப்பாயிரங்கள், சாற்றுக் கவிகள், வாழ்த்துக் கவிகள், சரம கவிகள், சீட்டுக் கவிகள் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளோம்.

கையெழுத்துப் பிரதிகளில் பெறப்பட்ட செய்திகளையும், கவிதைகளையும் சேர்த்துள்ளோம். அவரது பிறந்த ஆண்டையொட்டி கொண்டாடப்பட்ட நூற்றாண்டு விழாக் காலத்தில் வெளியான செய்திகளையும், கட்டுரைகளையும் தேடிப் பெற்று உள்ளடக்கியுள்ளோம்.

மேலும், அருள்வாக்கி பற்றி 30க்கும் மேற்பட்ட அறிஞர்களின் கூற்றுக்களைக் கட்டமிட்டு இச்சிறப்பிதழிலே வெளியிட்டுள்ளோம். இந்த சிறப்பிதழினை நாம் வெளியிட்டதன் நோக்கம் அருள்வாக்கி புலவர் பற்றிய ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும், பாடசாலை மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும், ஆய்வாளர்கள் மட்டத்திலும், சமூக மட்டத்திலும் பெரும் புலவரான அருள்வாக்கி பற்றிய ஒரு எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும்.

அருள்வாக்கி புலவர் சார்ந்த அனைத்து முயற்சிகளுக்கும் இச்சிறப்பிதழ் ஒரு திறவு கோளாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தெல்தோட்டை ஊடக மன்றத்தினர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் தொடர்பிலான நினைவு பேருரைகளை நிகழ்த்த முன் வந்திருப்பது நமக்கு மகிழ்வைத் தருகிறது. எமது எதிர்பார்ப்பும் அதுவே. அத்தோடு மறைந்து போன அருள்வாக்கியின் நூல்களை தேடிப் பெற்று பதிப்பித்தல், அவர்களின் நூல்களுக்கான உரைகளை எழுதுதல், அருள்வாக்கி புலவர் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள ஆவணம் செய்தல் போன்ற செயற்திட்டங்களும் இம்மன்றத்தின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும்.

ஆண்டுதோறும் அருள்வாக்கி பற்றிய நினைவுரைகளை ஆற்றும் அதேவேளை மூன்று மற்றும் ஐந்து ஆண்டுத் திட்டங்களை வகுத்து அவற்றை நோக்கி இயங்குவதும் முக்கியம் என்பதை இவ்விடத்தில் அழுத்திக் கூறுகின்றோம். இம்மன்றத்தின் பணி சிறக்க வாழ்த்தி மகிழ்கிறோம்.

நன்றி.

**திரு.வைத்தியர் ஞானம் ஞானசேகரன்**
இணை ஆசிரியர் – ஞானம் சஞ்சிகை

*இரு கணுறும் பிழை இரு கைகளின் பிழை*
*இருதயவும் பிழை இருங் காலால்*
*இனிது நடந்து செய் பிழைகள்*
*அருந் தவ மிடறு பெரும்பிழை உடன் வாயால்*
*வரு பொய் மறம் பகர் பிழை பிற மங்கையர்*
*மயலுருகும் பிழை அன்னை தாதை*
*மனமுழையும்படி வசை பகரும் பிழை*
*மதி பகரும் பெருமையரான*
*குருவும் மதின் சற கதவினை விடும் பிழை*
*குழகமுறுந்துணை அவர் போல*
*கொடிது பகர்ந்திடு பிழைகள் மறந்து செய்*
*குடிலணி வன் பகர் – தமிழ் மீது*
*சுரகி வரும் பிழை அற இனி இன்பக*
*துணை அருள் ஒன்றிட அருள்வீரே*

# மலையகத்தில் கல்வியறிவும், கவிப்புலமையும் மிக்கதோர் மாணிக்கமாய் மிளிர்ந்தவர் அருள்வாக்கி..!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

மலையகத்தில் கல்வியறிவும், கவிப்புலமையும் மிக்கதோர் மாணிக்கமாய் மிளிர்ந்தவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். இவரைப் பற்றி வெளியிடும் நினைவு மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உங்களின் இப்பணி பூரணத்துவமாக நிறைவடைந்து வெற்றி பெற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பிறந்த இடமான போப்பிட்டிய இன்றும் "புலவர்மலை" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. ஒரு முறை சபையிலே பாட்டாலே விளக்கேற்றி தனது கவிப்புலமையையும், இறைபக்தியையும் வெளிக்காட்டியவர் அப்துல் காதிர் புலவர். இதனால் "வித்துவதீபம்" என்ற பட்டத்தைப் பெற்றார்.

இவரைப் பற்றிய விடயங்களை இன்றைய இளம் சமுதாயத்தினர் அறிந்து கொள்வதற்கு அவரது இந்நினைவுப் பேருரையும், இந்நினைவு மலரும் பெரிதும் உதவி புரியும் என எண்ணுகின்றேன்.

இம்மலர் வெளியீட்டுடன் கூடிய நினைவுப் பேருரை நிகழ்வினை ஏற்பாடு செய்வதற்கு சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.எம். அப்பாஸ்,**
ஓய்வு பெற்ற அதிபர்,
மெதகெகில, தெல்தோட்டை.

# தெல்தோட்டை மண்ணின் மகிமையை நாடறியச் செய்த அம்சங்களில் அருள்வாக்கிக்கு முதன்மையிடம்..!

"அல்ஹம்துலில்லாஹ்" எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! எம் தலைவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரகள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

தெல்தோட்டை ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் நினைவு தினப் பேருரையை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தெல்தோட்டை மண்ணின் மகிமையை நாடறியச் செய்த அம்சங்களில் தேயிலைக்கு வழங்கப்படும் இடத்துக்கு நிகராகவே அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கும் முதன்மை இடம் வழங்கப்படுகின்றது என்றால் அதை யாரும் மறுக்க மட்டார்கள் என நினைக்கின்றேன்.

பாட்டாலே விளக்கேற்றி, பாட்டாலே விளக்கணையச் செய்த ஈழத்திருநாடு தந்த அரும் பெரும் புலவர், நம் மண்ணின் மைந்தர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் சாதனைகள் சொல்லில் அடங்காது. ஈழத்து இஸ்லாமியக் கலை இலக்கியத் துறைக்கு அவர் ஆற்றிய பங்குகள் அளப்பரியன. வித்துவதீப மகான் எம் புலவர் பிறந்த மண்ணில் அவர் புகழ்பாட வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

சமூகத்திற்காக தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கான கூலி இறைவனிடத்தில் நிறைவாகக் கிடைக்கும் அதே சமயம் அவர்கள் சமூகத்தின் நன்றிக்குரியவரகள், நினைவுபடுத்தப்பட வேண்டியவர்கள். இத்தகைய நினைவுபடுத்தல்கள் சமூகத்துக்காக உழைக்கின்ற, சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு தமது பணியை உற்சாகமாக மேற்கோள்வதற்கு ஆர்வமூட்டுவதாக அமையும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

இவ்வகையில் மேற்படி ஆக்கபூர்வமான பணியை மேற்கொள்ளும் தெல்தோட்டை ஊடக மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு தங்களது பணியை வல்ல அல்லாஹ் அங்கீகரித்து நிறைவான கூலியை வழங்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

**மௌலவி எச்.எம்.எம்.இல்யாஸ்,**

தலைவர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தெல்தோட்டை கிளை மற்றும் காதி நீதிபதி பாத்த ஹேவாஹெட்ட நிர்வாகப்பிரிவு.

# “நான் கற்கும் போதே அருள்வாக்கி அப்துல் காதிர் நூற்றாண்டு விழா இடம்பெற்றமை என்னால் மறக்க முடியாது”

அருள்வாக்கியின் உறவு முறையான நான் அவர் தொடர்பான பதிவுகளை என் தந்தை வாயிலாகவும், ஊர் பிரமுகர்கள் மற்றும் புத்தகங்கள் ஊடாகவும் அறிந்து கொண்டேன். “கங்காணி கங்காணி, உங்காணி வெங்காணி” எனப் பாடப்பட்ட தேயிலை காணி தொடர்பான கவிதை மற்றும் “சாச்சப்பா என்னை ஏச்சப்பா, இளநி காச்சப்பா, செவ்விளநி போச்சப்பா” (தெல்தோட்டை பிரதேசத்தில் உள்ள பள்ளேகம பகுதியில் அருள்வாக்கியின் உறவினரின் தோட்டத்தில் காணப்பட்ட இளநீர் மரம்) தொடர்பான கவிதைகள் மிகப் பிரபல்யமானவை. இக்கவிதைகளுடன் தொடர்புபட்ட இடங்களை எனது தந்தை நாம் சிறுவயதாக இருக்கும் போது அழைத்துச் சென்று காட்டியுள்ளார்.

1965ஆம் ஆண்டு நான் உயர்தரத்தில் கற்கும் போது எமது பாடசாலை அதிபர் ஜனாப் ஹசன் ஆசிரியர் தலைமையில் அருள்வாக்கி அப்துல் காதிர் நூற்றாண்டு விழா இடம்பெற்றது. அதில் நான் புலவரைப் பற்றி ஒரு சிற்றுரையாற்றிய பசுமை நினைவு இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளது. அன்று எமது பாடசாலை வித்துவ தீப வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**ஹாஜியானி. நாகூர் உம்மா எ. காதர்,**
ஒய்வு பெற்ற அதிபர்,
அல்-ஹிதாயா மஹா வித்தியாலயம்,
கொழும்பு-10

# கற்பனையில் கவி படைக்கும் ஆர்வமும் உணர்வும் உள்ளவர் அருள்வாக்கி

மலைகள் சூழ்ந்த மலைநாட்டில் மாபெரும் புதையல் அப்துல் காதிர் புலவர். புலவர் அவர்கள். 1866 இல் கண்டியைச் சேரந்த தெல்தோட்டை போபிட்டிய எனும் கிராமத்தில் பிறந்தவர். இளம் வயதிலே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர். அல்குர்ஆன் அறபுப் பள்ளியில் கல்வி கற்றவர். தனது 11வது வயதில் தானே பல கவிதைகளைப் படைத்து பாடக் கூடிய வல்லமை கொண்டவர். கற்பனையில் கவி படைக்கும் ஆர்வமும் உணர்வும் உள்ளவர்.

கண்டி திரித்துவக் கல்லூரியில் பாடசாலைக் கல்வியை கற்ற அவர் உயர் கல்வியை இந்தியாவில் கற்றார். சட்டவிதானம் கற்று எட்டுத் திசையிலும் புகழாரம் சூடியவர். வித்துவான்கள், ஆசான்கள், அறிஞர்களென அனைவரும் வியக்கும் வண்ணம் பாடல் பாடி சிறப்பு பெற்றவர். கவிக்கோர் புலவராக மட்டுமல்லாது மலையக இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவர் முஸ்லிம்களின் இலக்கியத்துறையில் கிடைத்ததோர் இலக்கணப் பரிசு என்றால் மிகையாகாது.

அவரது புகழ் மலையகத்தில் என்றும் மணக்கட்டும். செந்தமிழ் சிறப்புடன் பாடி இலங்கைக்கு பெருமைத் தேடி தந்த இவரை நினைவு கூறும் இந்நாளிலே...

ஆகாய சூரியனாக அவர் புகழ் அகிலமெங்கும் பிரகாசிக்கட்டும். தெல்தோட்டை எனும் பிரதேசத்தில் வித்துவான்களை உருவாக்கிய எனசல்கொல்லக்கு அவர் புகழ் மணம் பரவட்டும்.

புலவரது பெற்றோர்களான அல்லா பிச்சை, பாத்திமா ஆகியோருக்கு இறைவன் நல்லருள் பாளிக்க இறைவனை வேண்டுவதோடு இம்மையில் புலவர் செய்த நன்மைகள் மறுமையில் நற்பலனாய் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**தாவூத் லெப்பை ருக்கியா உம்மா,**
ஒய்வுபெற்ற ஆசிரியை.

# தமிழ் இலக்கியத்திற்கு மெருகூட்டி பெரும் தொண்டாற்றிய அருள் வாக்கி..!

தமிழ் இலக்கியத்திற்கு மெருகூட்டி பெரும் தொண்டாற்றிய அருள் வாக்கி அப்துல் காதிர் புலவர், பாட்டாலே விளக்கெரித்துப் பாட்டாலேயே விளக்கை அணைத்துக் காட்டி அற்புதமும் நிகழ்த்தியவர். வெறும் மலையை புலவர் மலையாக்கிய இவர் வித்துவத்தீபமாக மட்டுமல்ல, மலை உச்ச தீபமாகவும் பிரகாசிக்கின்றார். முப்பதுக்கு மேற்பட்ட இலக்கிய நூல்களை உலகுக்கு ஈந்து பல புத்தி ஜீவிகளாலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும், மாணவர்களாலும், பாமர மக்களாலும் பாராட்டப்பட்ட இவர் பத்துக்கு மேற்பட்ட புகழ் நாமங்களையும் பெற்றவர். சங்கப் புலவர் சிங்கமென புகழாரம் சூட்டப்பட்ட இவருக்கு அவர் பிறந்த மண்ணிலே அவரது 155 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூறுகின்றார்கள். ஏற்கனவே இலங்கையின் பல பாகங்களிலும் கலை விழாக்கள், இலக்கிய மன்றங்கள், கருத்தரங்குகள் அந்த உத்தமரை நினைவு கூறுவதற்கும் தவறவில்லை. இன்று இவரது சேவைகளை வானலைகளில் உலவ விட்டு மாபெரும் கைங்கரியம் ஒன்றினை செய்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும் புலவரது உறவினர்களுக்கும் தெல்தோட்டை மக்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு”

ஏற்பாட்டு குழுவினருக்கு நன்றி கூறுகின்றேன், பாராட்டுகின்றேன். தொடரட்டும் உங்கள் அரும் பணி.

“வாழ்க தமிழ் ஓங்குக அதன் புகழ்”

**யு.எல்.எம். நௌபர்**
உளவளத்துணையாளர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

# பெரும் செல்வத்தை உதறித் தள்ளி விட்டு தமிழ் இலக்கியத்துக்காகத் தொண்டாற்றியர் புலவர்..!

எழில் கொஞ்சம் மத்திய மலை நாட்டின் கண்டி மாவட்டம் தெல்தோட்டை போப்பிட்டிய என்ற கிராமத்தில் 1866.08.30ஆம் திகதி ஆ.பி. அல்லா பிச்சை ஹவ்வா உம்மா தம்பதியினருக்கு மகனாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பிறந்தார்.

தந்தை ஆ.பி. அல்லா பிச்சை அக்கால கட்டத்தில் வெள்ளைக் காரர்களுடன் சேர்ந்து "மெதகேகில" எஸ்டேட் என்ற தோட்டத்தை உருவாக்கி கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு பெரும் செல்வந்தராகத் திகழ்ந்தார். தனது நான்கு ஆண்பிள்ளைகளதும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த ஆ.பி. அல்லா பிச்சை அவர்கள் வாகனப் போக்குவரத்துக் குறைவான அக்காலத்தில் தனது பிள்ளைகளை சுமார் 20 மைல் தொலைவில் உள்ள கண்டி மாநகரப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். இதன் பிரகாரம் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை கண்டி போல்ஸ் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்.

பெரும் செல்வந்தரான தந்தையின் வாரிசுகளில் ஒருவரான அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இவைகளை உதறித் தள்ளி விட்டு தமிழ் இலக்கியத்துக்காகத் தொண்டாற்றினார். இவரது பெற்றோரால் இவருக்கு கொடுக்கப்பட்ட தேயிலைத் தோட்டம் இன்றும் "புலவர் மலை" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் மறைந்து ஓர் நூற்றாண்டைக் கடந்துள்ள இக்கால கட்டத்தில் அவர் பற்றிய நினைவுகளை தமது சந்ததியினருக்குத் தெரியப்படுத்த முன் வந்துள்ள குழுவினருக்கு அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் பேரன் என்ற வகையில் நன்றி கூறுவது எனது கடமை என எண்ணுகிறேன். புலவர் பற்றிய படைப்புகளும், பதிவுகளும் அதிகமாகப் புதைந்து போயுள்ள இச்சந்தர்ப்பத்தில் அவருக்காக நூற்றாண்டு விழாவை நடாத்த திட்டமிட்ட குழுவினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

இவ்வேளையில் இன்னுமொன்றையும் குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். இவர் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து எஸ்.எம்.ஏ ஹஸன் (முன்னாள் அதிபர் எனசல்கொல்ல மத்திய கல்லூரி) அவர்களுக்குக் கொடுத்து அவரை உற்சாகப்படுத்திய மர்ஹூம்

ஏ.பி. நூர் (டி.என் அல்லா பிச்சை), பி.எஸ்.ஏ மஜீத் சீ.எம்.ஏ. அஸீஸ் வஹாப் ஆசிரியர் ஆகியோரின் மண்ணறை வாழ்வுக்காகப் பிரார்த்திக்கின்றேன். இவர்களின் பெரு முயற்சியின் பலனாக புலவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை 1965ஆம் ஆண்டு எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் வெகு விமரிசையாக நடைபெற்றதை நினைவு கூர்கிறேன்.

**ஏ.எம் அமானுல்லாஹ்,**
ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்,
போப்பிட்டிய,
தெல்தோட்டை.

*தீப சித்தி*
*எரிவாய் விரிந்தெழுந்து எண்ணெய் மேல்*
*தோய்ந்து*
*கரிவாய் இருள்போகிக் காட்ட – அரியணையின்*
*துாண்டா விளக்கே! சுடர் விட்டு நீயென்முன்*
*ஈண்டிங் கெழுந்து எரி"*

*"காண்டற்கரியதோர் காட்சியே!!!– வேண்டி*
*எரியவுனை வைத்ததுபோல் எல்லோரும்*
*பார்க்க*

# அருள்வாக்கி எம் பிரதேசத்தின் அடையாளச் சின்னம்

அருள்வாக்கி எம் பிரதேசத்தின் அடையாளச் சின்னம்.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை, நிகழவிருக்கும் இத்தருணத்தில் அவர் தொடர்பான மனப் பதிவுகளைப் பகிர்ந்துக் கொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி.

வரலாறு, கல்வி, இலக்கியம் என்பவற்றில் எம் பிரதேசத்தவர்கள் எவ்வாறு ஈடுபாட்டோடு செயற்பட்டு எமக்கு முன்னோடிகளாக இருந்துள்ளனர் என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாவார்.

அவரை நினைவு கூறும் நிகழ்வுடன் இணைந்த வகையில் பிரதேச அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

**ஏ.எம்.ஏ. கபூர்,**

ஓய்வு பெற்ற அதிபர்.

*சீர்ம லர்ந்தொளிர் செய்யவர் சார்தரு*
*செய்ய நற்சபை சேர்தரு சீலரே*
*ஏர்ம லர்ந்திடு மிச்சபை மீதிலே*
*எம்மை யுஞ்சில செப்பிட வேவலால்*
*கார்ந் லந்திகழ் கண்டிநன் னாட்டிலே*
*கவின்வ ளர்ந்திட வோங்கிய காவலன்*
*பார்பு கழ்ந்திடு பண்புடைப் பாவலன்*
*பத்தி நீடருள் வாக்கியை வாழ்த்துமே*

# பாட்டாலே விளக்கெரியச் செய்து பாட்டாலே விளக்கை அணையச் செய்த பெரும் புலவர்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

பாட்டாலே விளக்கெரியச் செய்து பாட்டாலே விளக்கை அணையச் செய்த பெரும் புலவரான அருள்வாக்கி அப்துல் காதிர் தனது பதினாறாம் வயதில் யாழ்ப்பாணக் கவியரங்கில் கவிமழைப் பொழிந்த திறனை வியந்தோர் இவருக்கு "அருள்வாக்கி" எனப் பட்டம் சூட்டினர். எமது மண், எமது புலவரைப்பற்றி எழுதப்படுகின்ற நினைவு மலர் மற்றும் நினைவுப் பேருரை தொடர்பாக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இளைய சமூகத்துக்கு இவர் பற்றிய தகவல்களை நினைவு மலர் ஊடாக வழங்குவது எமது எதிர்கால சந்ததிக்குப் பெருஞ் சொத்தாக அமையும் என நினைக்கின்றேன்.

புலவர் மலையாம் போப்பிடிய கிராமத்திலிருந்து கவிகள் பல தந்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் நினைவுப் பேருரை மற்றும் மலர் வெளியீடு நிகழ்வினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லாஹ் உங்கள் நற்செயல்களைப் பொருந்திக் கொள்வானாக!.

**அல்ஹாஜ் மௌலவி எம்.எம். செய்யது அலி (ஜிப்ரி)**
ஓய்வு பெற்ற அதிபர்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
மஹ்பலுல் உலமா தொழில்நுட்ப கல்லூரி இணைப்பாளர்.
ஓ.எம். மன்சில், பள்ளேகம, தெல்தோட்டை.

# பண்டிதர்களும், பாமரர்களும் போற்றும் புகழ் பூத்த – அருள்வாக்கி! புகழ் பூத்த வித்துவ தீபம்!

மத்திய மலைநாட்டுத் தலைநகர் சரித்திரப் பிரசித்தி பெற்ற கண்டி மீரா மகாம் பள்ளியில் "பாவினால் விளக்கேற்றி – அப் – பாவினாலேயே விளக்கணைத்த பெரும் மகான் அருள்வாக்கி அப்துல் காதிர்புலவர், தமது பதினாறு வயதில் யாழ்ப்பாணத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட கவியரங்கு மண்டபத்தின் முன் சென்று தானும் கவி பாட வந்துள்ளேன் என தலைமையிடம் அனுமதி கேட்டபோது...

"வாரும் – இரும் – படியும்"
உமக்கென்ன கானும் முடியும்? என்ற தலைமையின் நகைப்புக் கேள்விக்கு
இசைவாக...
"தூர இருந்து துருத்தியை ஊதும்" என்றும்...
அட்டகிரியை ஒரு பந்தாக உருட்டி
அம்பலம் முன்னே வைப்பேன் – அதை
வானிலே வீசி எறிவேன்! அவ்
வானத்தை வில்லாக வளைப்பேன் – அங்கு
வான் மழை பொழியவும் செய்வேன்!!
ஏழு–கடலை– பையனைக் கொண்டு வீசி – அதில்
விளையாடச் செய்வேன்!!!

என அடுக்கு வரிகளில் நா. அம்பலவானரையும் அதிரச் செய்தார் புலவர். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய முத்துக் குவியல்களைத் தந்துள்ளவரும் பண்டிதர்களும், பாமரர்களும் போற்றுகின்றவருமான புகழ் பூத்த – அருள்வாக்கி "வித்துவதீபப்" புலவரின் 155ம் வருட நிறைவை நினைவு கூறும் இவ்வேளையில், நான் பிறந்த தெல்தோட்டை மண் வாசனை நல் மனங்களுக்கும், அவர் உறவினர்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் பண்புடன் பகிர்ந்து கொள்கின்றேன்.!

நன்றி!
வஸ்ஸலாம்

"SAAMASRI-HAADIMU-SHIFAA"
கலாபூஷணம்: அல்ஹாஜ் நாகூர் ரஹீம் (ஜே.பி),
இலங்கை கதீப்மார்கள் மற்றும்
முகத்தீன்மார்கள் நலன்புரி அமைப்பின் பொதுச் செயலாளர்,
கொழும்பு மாவட்ட முஸ்லிம் விவாகப் பதிவாளர்.

# சிறு வயதிலேயே தமது கவியாற்றலால் அருள் வாக்கி எனும் நாமம் பெற்றவர்

தெல்தோட்டைப் பிரதேசத்துக்கு பெருமைத் தேடி தந்த அருள் வாக்கி அப்துல் காதிர் புலவரின் பிறந்த நாளை ஞாபகப்படுத்தி வெளியிடும் நினைவு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினைப் படித்து பார்க்கும் போது அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்த அபாரமான ஆற்றலை அறிய முடிகின்றது. இறையச்சம் நிறைந்த மெய்ஞான அறிவு மிக்கவராய் அவர்களைை நாம் காணலாம். அவர்களது பல்வேறு நூல்களில் 'சந்தத் திருப்புகழ்' எனும் சிறப்பு மிக்க நூல் நபி (ஸல்) அவர்கள் மீதான துதிப்பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வியில் ஆர்வமுள்ள புலவராக விளங்கி இலங்கையிலும் இந்தியாவில் தனது பாட்டனார் வாழ்ந்த இடத்திலும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டமை இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

1912ஆம் ஆண்டளவில் யாழ்ப்பானத்தில் மூன்று வார காலமாக சன்மார்க்க இலக்கியப் பேருரையாற்றியதன் காரணமாக அங்கு 'வித்துவ தீபம்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட புலவர் அப்துல் காதிர் அவர்கள், நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கண்டியில் கவிஞர்கள், அறிஞர்கள், பொது மக்கள் ஒன்று கூடிய மாபெரும் சபையில் அல்லாஹ்வின் அருளால் பாட்டால் விளக்கேற்றி பாட்டால் விளக்கை அணைத்த சம்பவம் அவர்களுடைய வரலாற்றில் நிகழ்ந்த அற்புத நிகழ்வாக நாம் காண முடிகின்றது. 16 வயது இளைஞராக இருந்த போது தமது கவிதை ஆற்றலை வெளிப்படுத்தியமையால் 'அருள் வாக்கி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் இங்கு விஷேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

எனசல்கொல்லயில் அமைந்துள்ள புலவர் மலை அவர்களை என்றும் எமக்கு நினைவுக்குக் கொண்டு வருகின்றது. இவ்வாறு சாதனை வீரராக திகழ்ந்த தெல்தோட்டை பிரதேச மண்ணுக்கு பெருமை சேர்த்த அப்துல் காதிர் புலவரை ஞாபகப்படுத்தி நினைவுப் பேருரையையும் மலர் வெளியீட்டையும் மேற்கொண்ட ஏற்பாட்டாளர்களைப் போற்றுகின்றேன். அவர்களின் இப்பணி மேலும் தொடர எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**மௌலவி ஏ.ஆர் அப்துர் ரஸ்ஸாக் (நத்வி),**
B.A, PGDE,
அதிபர்,
தெல்தோட்டை மஹ்பலுல் உலமா அரபுக்கல்லூரி.

# மலையக முண்டாசு கவிஞனுக்கு முத்திரையுமில்லை; முக்கியத்துவமுமில்லை

மலையக முண்டாசு கவிஞனுக்கு முத்திரையுமில்லை. முக்கியத்துவமுமில்லை...

முண்டாசு கவிஞன் தமிழ்நாட்டில் மட்டுமல்ல எங்கள் இலங்கைத் திருநாட்டின் மலையக மண்ணில் தெல்தோட்டை ஊரிலும் வாழ்ந்து வந்தார். வண்ணத் தமிழை வளர்த்தார். அவர் தான் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இவரது நினைவு தினம் ஆகஸ்ட் 30 ஆம் திகதி மலர்வதையொட்டி வெளியிடும் நினைவு மலருக்கு கீழ்வரும் எனதிரு மனப்பதிவுகளை இங்கு நான் பதிவுசெய்ய விரும்புகின்றேன்

நினைத்துப் பார்க்கிறேன்... – ஆம்..,
அது 1966 கொழும்பு சாஹிரா கல்லூரியில் நான் க. பொ. த. உயர்தரம் பயின்றுக் கொண்டிருக்கின்றேன். எனது தமிழ் ஆசான் வை. கா. சிவபிரகாசம் அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் அருமை பெருமைகளை விளக்கினார். முதலாவது மாநாடு மலேசியாவில் நடக்க, அதன் இரண்டாவது மாநாடு வெகுசிறப்பாகத் தமிழகத்து சென்னையில் தி.மு.கா தலைவர் பேராசிரியர் சி.என் அண்ணாதுரை தலைமையில் 1967இல் நடக்கவிருக்கும் மாநாட்டின் முக்கியத்துவத்தை தமிழாசான் வை. கா. சிவபிரகாசம் விதந்துரைத்தார். அவற்றில் ஒன்று தமிழுக்கு பணியும்– அணியும் செய்த தமிழ் நாட்டின் தமிழ் புலவர்கள் கவிஞர்களுக்கு சென்னை மெரீனா கடற்கரையில், பிரஸ்தாப மாநாட்டையொட்டி நினைவுச் சிலைகள் எழுப்புவது தமிழ்நாட்டில் பிறந்த தமிழ்ப் புலவர்கள்– கவிஞர்களுக்கு சிலை வைப்பது என்றால் “ சேய் தமிழகம் என உச்சி மீது வைத்து மெச்சும் எங்கள் இலங்கையில் பிறந்து தமிழ் வளர்த்த தமிழ் புலவர்கள் – கவிஞர்களுக்கு எங்கே சிலை, எப்போது சிலை வைப்பது...?” இந்த தகவலை அப்போது இங்குள்ள எந்த தமிழ் அமைப்பிற்கும் தமிழ் தலைவர்களுக்கும் வரவில்லை. ஆனால் ஒரே ஒரு தமிழ் நெஞ்சத்தை மட்டும் அது நெகிழ வைத்தது. அவர் யார்...?

அவர்தான், பல பழைய புதிய இலக்கியவாதிகளுக்கு இலக்கிய தகவல்களை தந்துதவும் நடமாடும் இலக்கிய பல்கலைக்கழகம் என புகழப்படும் எந்தன் எழுத்து பயணத்தின் வழிகாட்டியுமான மர்ஹூம் டி. என் அல்லாபிச்சை என்பார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் சிலைவைப்பு ஏற்பாட்டினை எனக்கு விளக்கி எங்கள் நாட்டின் மலையகத்தில் பிறந்த அருள்வாக்கி அப்துல் காதிர் உட்பட இன்னும் பலர்

தமிழ்ப் பணி செய்துள்ளனர் அவர்களுக்கும் சிலை வைக்க வேண்டும். அருள்வாக்கி அப்துல் காதிர் போன்ற முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் பெயர்கள் பொறித்த நினைவுத் தூபி ஒன்று சென்னை மெறினாவில் முஸ்லிம்கள் சிலை வைப்பதில்லை என்பதால் நிறுவப்பட வேண்டும் என்று தம் உரிமைக்காக குரல் கொடுத்தார். மர்ஹூம் அல்லா பிச்சை இது தொடர்பான எல்லாத் தகவல்களையும், என்னிடம் தந்து நான் பிரஸ்தாப மாநாட்டுக்குப் போக இருப்பதனால் சென்னையில் அப்போதைய மேயர், மர்ஹூம் அபிபுல்லாஹ் சேய்க். அவர்களுக்கு தபாலில் அனுப்பவும் நேரில் கையளிக்கவும் தந்து என்னை உச்சாகப்படுத்தினார் அல்லாபிச்சை.

எல்லா முயற்சிகளையும் கனகச்சிதமாக செய்தும், மாநாட்டில் நம் இலங்கை தமிழ் புலவர்களுக்குச் சிலையும் இல்லை ஸ்தூபியும் இல்லை. இதை அறிந்த அப்போதைய உதவி வானொலி அமைச்சராகவிருந்த மர்ஹூம் மூதூர் மஜீத் இலங்கை முஸ்லிம் தமிழ் புலவர்களுக்கு எங்கள் நாட்டில் என் தொகுதியில் ஸ்தூபி ஒன்று எழுப்புவேன் எனச் சூழுரைத்துத் தாயகம் திரும்பினார்.

நம் நாட்டுத் தமிழ் பத்திரிகை ஜாம்பவான் மறைந்த எஸ்.டி சிவநாயகம் பிரஸ்தாப மாநாட்டுக்குப் போய் வந்த இரண்டாம் வாரம் தனது சிந்தாமணி வாராந்த இதழில் பூரித்த தமிழகத்தில் பொங்கிய செந்தமிழ் எனும் தலைப்பில் 40 வாரங்களாகத் தொடர் கட்டுரை எழுதினார். அதில் அருள்வாக்கி அப்துல் காதிர் இலங்கை புலவர்களுக்கு மேற்படி மாநாடு எவ்வித முக்கியத்துவமும் தராததையும், மூதூர் மஜீத் சூழுரைத்து வந்ததையும் குறிப்பிட்டு எழுதினார் என்பது கவனிக்கத்தக்கது. இன்றுவரை 54 வருடங்கள் ஆகியும் நினைவு ஸ்தூபி மூதூரிலோ வேறு எங்குமோ எழுப்பப்படவில்லை என்பது சோகம் சுமந்த தகவல்.

இதே சிவநாயகம் தன் பொறுப்பில் வெளிவந்த தினபதி எனும் தினசரியில் அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவு முத்திரை வெளியிட வேண்டும் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அக்காலப் பிரிவில் நான் தினபதி, சிந்தாமனியில் சுயாதீனப் பத்திரிகையாளனாக எழுதி வருகிறேன். பத்திரிகை ஜாம்பவான் சிவநாயகத்தாரின் மலையகத்து முண்டாசு கவிஞருக்கு முத்திரை வெளியிட வேண்டும் எனும் கட்டுரைக்கு எதிர்ப்புக் கிழம்பியது. எதிர்ப்பு வெளியில் இருந்து வரவில்லை உள்ளிருந்தே வந்தது. ஆம் – முஸ்லிம் சமூகத்திலிருந்து வந்துதான் வியப்பை தந்தது. “முஸ்லிம் பெரியாருக்கு முத்திரை வெளியிடுவதனால் முதலில் அறிஞர் சித்திலெப்பைக்கே வெளியிட வேண்டும், அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கு அல்ல” என எதிர்த்தோர் காரணம் கூறினர்.

இது தொடர்பான வாதப்பிரதி வாதங்கள் மேலும் சில கட்டுரைகளில் தொடர்ந்தன. ஈற்றில் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் ஓர் இந்திய வம்சாவளி என்று பிரஸ்தாப எதிர்ப்பாளர்கள் கூறினர். அத்தோடு அந்தப் பிரச்சினை முடிய நாளடைவில் அறிஞர் சித்திலெப்பைக்கு ஒரு முத்திரை வெளியானது. முண்டாசு கவிஞர் அருள்வாக்கி அப்துல் காதிருக்கு முத்திரை வெளிவரவில்லை. இந்த சோகம் நிகழ்ந்து சில காலம் செல்ல முன்னர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவிடம் தலைவர் எஸ். தொண்டமான் பல முறை பேசி மலையக மக்களுக்கு இலங்கை பிரஜாவுரிமைப் பெற வழிசமைத்தார். இதன் மூலம் இனிமேல் எவரும் வம்சாவளியினரல்லர் எல்லோருமே இலங்கைப் பிரஜைகள் என்று உறுதியாயிற்று. சில வாரங்களுக்கு பின் தமிழ்ப் பத்திரிகை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் என்னிடம் பிரேமதாச கொண்டுவந்த பிரஜா உரிமை சட்டம் கதவை திறந்து விட்டது. இனி நமது அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கு முத்திரை வெளியிடத் தடையில்லை என கூறி சம்மந்தப்பட்டவர்களிடம் விடயத்தை விளக்கும்படி சொன்னார். நானும் இது தொடர்பாக பலரிடம் பிரஸ்தாபித்தேன். சோடா போத்தல் வேக குணம் நம் சமூகம் அதன் பின் எந்த முயற்சியும் செய்யவில்லை அதனால் இன்றுவரை அருள்வாக்கி அப்துல் காதிருக்கு முத்திரை வெளிவரவில்லை என்பது மாறாத சோகம். இனியாவது வருமா?

**சத்திய எழுத்தாளன்,**
கலாபூஷனம் எஸ். ஐ. நாகூர்கனி,
கொழும்பு–12.

*அட்டகிரி எட்டையும் பந்தாகவே உருட்டி*
*அம்பலம் முன்னில் வைப்பேன்*
*அதனை வான்மீதிலே பற்றியெறிவேன்*
*வானத்தை வில்லாக வளைப்பேன்*
*அதில் மழைபொழியவும் வைப்பேன்*
*ஏழு கடலைப் பாலனைக் கொண்டு*
*வீசி விளையாடச் செய்வேன்*

– யாழ்பாணத்தில் புலவர்கள் மத்தியில் பாடிய கவி –

# இளம் வயதிலேயே ஈழநாட்டுக் கவிஞர்கள் யாவரையும் மெய்சிலிர்க்கவைத்த தீபசித்தி

எமது தெல்தோட்டை மண்ணிலே 1866ம் ஆண்டு பிறந்து தனது பதினொராம் வயதில் கவிபாடத் தொடங்கி, இளம் வயதிலேயே ஈழநாட்டுக் கவிஞர்கள் யாவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் பாட்டினாலே விளக்கேற்றி பாட்டினாலேயே அதனை அணைக்கவும் வைத்து தீபசித்தி செய்துகாட்டிய மர்ஹூம் அப்துல் காதிர் புலவரவர்கள் இன்று (30.08.2021) தெல்தோட்டை ஊடக மன்றத்தினால் நினைவு கூறப்படுவது எனக்கு மிகவும் உவகையளிக்கிறது.

1965ஆம் ஆண்டு வித்துவதீப வித்தியாலயத்தின் தற்போதைய எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி அல்ஹாஜ் S.M.A. ஹசன் அவர்களின் தலைமையில் கவிஞருக்கு நூற்றாண்டு விழாவொன்று வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. 1973ல் “அருள் வாக்கி அப்துல் காதிர்” என்ற பெயரில் நூலொன்றையும் ஹசன் ஆசிரியர் வெளியிட்டு வைத்தமை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். இந்நூலை 1989ம் ஆண்டு கல்ஹின்னை தமிழ் மன்றத்தினர் மீள் பதிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. புதிய பரம்பரையினர் புலவரைப் பற்றி அறிந்துகொள்ள இந்நூலே கால்கோளாய் அமைந்துள்ளது. வல்ல அல்லாஹ் அவருக்கு நோய்நொடியற்ற நீண்ட ஆயுளை வழங்கியருள்வானாக.

தூரசிந்தனையுடன் பெருமுயற்சியெடுத்து மிக்க சிரமத்துடன் இந்நினைவு தின நிகழ்ச்சிகளை மிக சிறப்பாக Zoom தொழிநுட்பத்தினூடாக ஏற்பாடு செய்துள்ள தெல்தோட்டை ஊடக மன்றத்தினரை மீண்டும் மீண்டும் வாழ்த்திப்போற்றுகின்றேன். அதன் பணி என்றென்றும் சிறந்தோங்கட்டும் ஆமீன்.

**ஹாஜியானி I. S. கரீமா பீபீ,**
ஓய்வு பெற்ற ஆசிரியை,
53, ஹைறத் பிளேஸ் தெல்தோட்டை.

# அருள்வாக்கியின் புகழ் என்றும் இந்த மண்ணில் நிலைத்திட வேண்டும்.!!

பட்டியகாமம் (தற்போதைய பெயர் தெல்தோட்டை) பிரதேசத்திற்கே ஆரம்பத்தில் ஒரேயொரு பள்ளிவாசல் தான் இருந்துள்ளது. கோணாங்கொடை பள்ளிவாசல் தோட்டம் என குறிப்பிடப்படும் பகுதியில் தான் பள்ளிவாசல் காணப்பட்டதாக நாம் அறிகிறோம். 1800 களின் ஆரம்பத்தில் போபிடிய பகுதியில் குடியேறிய கங்கானி அல்லாபிச்சை, அதாவது காவியத் தலைவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் தந்தை அப்பகுதியில் தொழுவதற்கான இடமொன்றை ஒதுக்கிக் கொண்டார். காலப்போக்கில் அந்த பழமையான சாவியா இடிந்து விழுந்துள்ளது. பிற்காலத்தில் அப்பகுதிக்கு பள்ளிவாசல் ஒன்றின் தேவை உணரப்பட்டமையினால் அப்துல் காதிர் புலவரின் காலத்தில் அங்கு தொழுகை நடத்த பள்ளிவாசல் இருந்ததை சுட்டிக் காட்டி தக்கியா ஒன்றை அமைத்தோம். இதற்கு சவூதி அரசாங்கத்தினால் உதவி கிடைத்தது.

1965ம் ஆண்டு காலப்பகுதியில் எனசல்கொல்ல மகா வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக நான் இருந்தேன். 1967இல் தான் இங்கு அருள்வாக்கியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. எமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டெனியல் ஹப்புஹாமி உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தமை எனக்கு நினைவில் உள்ளது.

அருள்வாக்கியின் புகழ் என்றும் இந்த மண்ணில் நிலைத்திட வேண்டும்!

**எம்.ஏ. செய்னுலாப்தீன்,**
ஓய்வு நிலை ஆசிரியர்,
(தெல்தோட்டை பிரதேசத்தின் முதலாவது
தமிழ் மொழி மூலம் ஆசிரியர் நியமனம் பெற்றவர்)

# அருள்வாக்கியை மக்கள் மயப்படுத்துவதில் வளர்மதிக்கும் பங்குண்டு!

ஒரு பாடசாலை மாணவனாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் நூற்றாண்டு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தது நினைவில் இருக்கிறது. எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் போது, அப்பாடசாலையின் பெயரை “வித்துபதீபம்” என்று மாற்றுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டது. எனினும் அப்போதைக்கு அது நடைமுறைக்குச் சாத்தியப்படவில்லை. பின்னொரு காலத்தில் அப்பாடசாலையின் பெயர் “வித்துபதீபம்” என பெயர் மாற்றம் பெற்றதாக அறிகிறேன்.

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய போது பாடசாலையில் வெளிவந்த “வளர்மதி” சஞ்சிகையில் தொடர்ச்சியாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றிய விடயங்கள் பிரசுரமாகியது.

**எஸ்.எம். நிஜாம்,**

ஓய்வு நிலை அதிபர்.

*அட்டகிரி எட்டையும் பந்தாகவே உருட்டி*
*அம்பலம் முன்னில் வைப்பேன்*
*அதனை வான்மீதிலே பற்றியெறிவேன்*
*வானத்தை வில்லாக வளைப்பேன்*
*அதில் மழைபொழியவும் வைப்பேன்*
*ஏழு கடலைப் பாலனைக் கொண்டு*
*வீசி விளையாடச் செய்வேன்*

– யாழ்பாணத்தில் புலவர்கள் மத்தியில் பாடிய கவி –

# பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்த மாபெரும் புலவர் அருள்வாக்கி

எமது தெல்தோட்டை மண்ணுக்குப் பெருமை சேர்த்த மாபெரும் புலவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்கள் சம்பந்தமான நினைவு மலருக்கும், நினைவு பேருரைக்கும் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமைகொள்கிறேன்.

இன்று 155 வருடங்களுக்கும் மேலாக ஒரு கவிஞன் போற்றப்படுகிறான் என்றால் அவனது இலக்கிய பணிகளில் அவன் தன்னிறைவு பெற்றுள்ளான் என்பதைக்காட்டுகிறது.

பாட்டாலே விளக்கேற்றிப் பாட்டாலே விளக்கணைக்கும் அருள் நிறைந்தவர், அட்டவதானி, வித்துவ தீபம், வெண்பா புலி, கல்விக்கடல் என்றெல்லாம் பலராலும் பாராட்டப்பட்டு புகழப்பட்டவர் அருள்வாக்கி. அவரைப்பற்றி முதன் முதலில் வெளியுலகுக்குக் காட்டியவர் பன்னூலாசிரியரும் கல்வி அதிகாரியுமான எஸ்.எம்.ஏ. ஹசன் ஆவார்.

அவர் க/எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அருள்வாக்கியின் நூற்றாண்டு விழாவை மிகச்சிறப்பாக செய்தார். அவருக்கு தங்களின் தெல்தோட்டை ஊடக மன்றம் விசேட கௌரவிப்புச் செய்கிறது என்பதை அறிந்து அகம் மகிழ்ந்தேன்.

உங்களது இப்பணி பாராட்டத்தக்கது. இந்த ஊடக மன்றம் இது போன்ற சிறந்த பணிகளை இனிவரும் காலத்திலும் செய்வதற்கு எனது பிரார்த்தனைகள்.

அன்புடன்,

**எஸ். ஷரீப்தீன்,**
ஓய்வு பெற்ற ஆசிரியர்.

# ‘அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்’ பற்றிய பாடம் அரச பாடவிதானத்துக்குள் உள்ளீர்க்கப்பட வேண்டும்

நம் ஈழத்திரு நாட்டில் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியிலும் செந்தமிழை வளப்படுத்திய கவிஞர்களுள் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் குத்து விளக்காகத் திகழ்ந்துள்ளார்கள்.

இவர் தமிழ் இலக்கியத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பின் காரணமாக குறித்த காலத்து இந்து, இஸ்லாமிய வித்துவான்கள் இவரை பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு அழைத்துள்ளமையும், பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் தமது இலக்கிய ஆய்வுக்காக இவரது படைப்புகளைத் தெரிவு செய்துள்ளமையும் இவரது கவிதைகளின் பெறுமானத்திற்குத் தக்க சான்றுகளாய் அமைந்துள்ளன.

இவரது தமிழ்ப் பணியினை அங்கீகரிக்கும் வகையில் அரச பாடவிதானக் குழுவினர் 1993ஆம் வருட ஏழாம் ஆண்டு தமிழ் பாடத்திட்டத்துக்குள் “அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்” என்ற தலைப்பில் ஒரு பாடத்தை உட்படுத்தியிருந்தனர். இப்பாடம் பத்து பக்கங்களுடன் பதினான்காம் அலகாக இடம்பெற்றிருந்தது. சில வருடங்களின் பின் இப்பாட அலகு பாடத்திட்டத்திலிருந்தும் அகற்றப்பட்டுவிட்டது. இதனால் இவரைப் பற்றிய செய்திகள் இளைய தலைமுறையினரைச் சென்றடைவதற்கு தாழ்ப்பாள் இடப்பட்டது.

வளப்பற்றாக்குறைகள் நிலவிய மிகத் தொண்மையான காலத்தில் மிகவும் பின்தங்கிய மலைநாட்டுப் பகுதியிலிருந்து இலக்கிய பணியாற்றிய அருள் வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றிய பாடம் மீண்டும் அரசாங்க பாடவிதானத்துக்குள் உள்ளீர்க்கப்பட வேண்டியது காலத்தின் இன்றியமையாத் தேவையாகும். இத்தரணியில் தமிழை தழைத்தோங்கச் செய்யவேண்டுமென ஆர்வங்கொண்டுள்ள சகலரும் ஒரணிதிரண்டு இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மிகமிக அவசியம்.

**மௌலவி, ஐ.எம். நிஸாம் (B.A),**
ஆசிரிய ஆலோசகர் (இஸ்லாம்),
வலயக்கல்விக் காரியாலயம்,
கண்டி.

# புலவர் பிறந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் அவர் புகழை உயிர்ப்பிப்பது பாராட்டுக்குரியது

1958 ஆம் ஆண்டு எனது ஆசிரிய நியமனமும் 1957 ஆம் ஆண்டு எனது துணைவர் மர்ஹூம் கலாபூஷணம், கவிஞர் எம்.எச்.எம். ஹலீம்தீன் அவர்களது ஆசிரிய நியமனமும் எனசல்கொல்ல முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து ஆரம்பித்ததில் நாம் எப்போதும் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் வாழ்ந்த மண்ணில் அந்த மாமனிதரின் காலடிபட்ட பூமியில் வித்துவ தீபமாக ஆரம்பித்த எனசல்கொல்ல முஸ்லிம் வித்தியாலயம் அமைந்திருந்ததே அதற்குக் காரணம்.

பல்வேறு சிறப்புப் பெயர்களுக்கும் உரித்தான பெரும் புலவரைப் பற்றி உலகறியச் செய்திருக்க வேண்டிய மூத்தவர்கள் விட்ட குறை தெல்தோட்டை ஊடக மன்றம் என்ற பெயரில் இன்றைய இளைய தலைமுறைகளால் நிறைவேறுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

ஏனைய சில எழுத்தாளர்களால் அருள்வாக்கி பற்றிய ஆக்கங்கள் அவ்வப்போது வெளி வந்தாலும் அவர் பிறந்த மண்ணைச் சேர்ந்த நமது பிள்ளைகள் ஒன்று சேர்ந்து இவ்வாறு சிறப்பானதொரு அத்திவாரமிட்டு அந்த மகானின் புகழை உயிர்ப்பிப்பது பாராட்டுக்குரியது. தெல்தோட்டை ஊடக மன்றத்தின் முயற்சிகளனைத்தும் சிறப்பாக அமைய எனது பிரார்த்தனைகளுடன் மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் அகமகிழ்கிறேன்.

**ஜெமீலா ஹலீம்தீன்,**

ஓய்வு பெற்ற ஆசிரியை.

*சித்தி நிலை தேறாத சிற்றறிவோர் தங்களுக்குச்*
*சத்தி நிலை ஞானித்தந் தந்தன்னான் – முத்திநிலை*
*பேறு பெறு நற்றவ விவேகன் கொழும்பு நகர்த்*
*தேறுதலி னப்துல் அஸீஸே*

– முஸ்லிம் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் மர்ஹூம்
ஐ.எல்.எம். அஸீஸ் அவர்கள் அறிஞர் சித்திலெப்பையின் அஸ்ராருல்
ஆலத்தை ஆதரித்து எழுதிய 'சத்தின் ஞானார்த்தம்' என்னும் நூலுக்கு
அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் வழங்கிய சாற்று கவி –



# 03

# பேருரை

# பேருரை...

இஸ்லாமிய இலக்கிய அறிவினாலும் தமிழ் புலமையினாலும் இலக்கியப் படைப்புக்களாலும் சன்மார்க்கப் பிரசங்கங்களாலும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் நன்கறியப்பட்ட புலமையாளர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். 30இற்கும் அதிகமான இஸ்லாமிய இலக்கிய நூல்களை இயற்றி, இஸ்லாமிய இலக்கியத்திற்கும், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியவர் அருள்வாக்கி அப்துல் காதர்.

1866இல், அவர் இலங்கையில் பட்டியகாமம் (இப்போது தெல்தோட்டை என்று அழைக்கப்படும்) கிராமத்தில் பிறந்தார். இலங்கையில் முஸ்லிம்களிடையே நவீன சிந்தனைக்கும் நவீன கல்விக்குமான சீர்த்திருத்தப் போராட்டத்திற்குமான காலப்பகுதி அது. கண்டியிலும் சீர்திருத்த முயற்சிகள் சித்திலெப்பையின் தலைமையில் நடந்துக் கொண்டிருந்தன.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பொறுத்தவரை 19ஆம் நூற்றாண்டு ஒரு குறிப்பிடத்தக்கக் காலப்பகுதியாகும். பழைமையின் சவாலும் புதுமையின் தோற்றமும் அதை அழகுபடுத்துகிறது. மாற்றங்கள், கிளர்ச்சிகளின் காலமும் அதுதான். முந்தைய நூற்றாண்டுகளின் பண்பாட்டின் தொடர்ச்சிகளையும், முடிவையும் அங்கு நாம் சந்திக்கிறோம்.

18ஆம் நூற்றாண்டில் இருந்து 20ஆம் நூற்றாண்டின் முன் அரைநூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தான் இக் காலப்பகுதிக்குரிய சமூக இயக்கத்தை மதிப்பிட நாம் முயற்சி செய்து வருகிறோம்.

இலக்கியம், வர்த்தகம், பண்பாடு, சொந்தங்கள், உறவுகள் என்ற வகையில் இந்தியாவின் குறிப்பாக தமிழ் நாட்டில் செல்வாக்கு மேலோங்கி இருந்த காலப்பகுதியும் இதுதான்.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் 19ம் நூற்றாண்டு இறுதி தசாப்தங்களிலும் 20ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்கள் வரையும் மத்திய மலைநாட்டில் வாழ்ந்தவராவார்.

மத்திய மலைநாட்டுடன் இந்திய முஸ்லிம்களுக்கு இருந்த தொடர்புகளின் அடையாளமாகவும் அருள்வாக்கி அப்துல் காதிரின் வாழ்க்கையை நாம் நோக்கலாம்.

இலங்கையில் மத்திய மலைநாட்டுப் பகுதியில் கோப்பி, தேயிலைத் தோட்டங்களை உருவாக்கும் பணிக்காக இந்தியாவிலிருந்து இலட்சக்கணக்கான தொழிலாளர்கள்

சொந்த நாட்டை விட்டு இலங்கை வந்த சரித்திரம் நிகழ்ந்த காலப்பகுதியில் அவர் வாழ்க்கை ஆரம்பமாகிறது. அதன் ஒரு அத்தாட்சியாகவும் அப்துல் காதிர் புலவரின் வாழ்க்கை அமைந்திருந்தது. தமிழ்நாட்டையும் இலங்கை முஸ்லிம்களையும் இணைக்கும் பாலமாகவும் அவர் இருந்தார் என்று கூறுவது மிகவும் பொருத்தமானது.

புலவர்கள் பற்றிய கருத்துக்களில் மாற்றம் வேண்டும். முஸ்லிம் பண்பாடு, மொழி, இலக்கியம், வரலாறு என்று எந்த விடயங்களைப் பேசினாலும் அங்கு புலவர்களின் பங்களிப்புக்களையும், தொடர்புகளையும் நாம் கண்டு கொள்கிறோம். சரியாகக் கூறினால் புலவர்கள் பண்பாட்டின் வேர்கள், மொழிப் பாண்டித்தியத்தோடு புலமையின் சின்னமாக விளங்கியவர்களும், சிறப்பான மொழி அறிவோடு மண்வாசனை புலவர்களாக விளங்கியவர்களும் இதில் அடங்குவர். இவர்களைப் பற்றி எழுதவும், ஆராயவும் நாம் எடுத்த முயற்சிகள் போதுமானதல்ல.

கடந்த நூற்றாண்டுகளில் இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு வரலாற்றை ஆழமான வரலாற்று வரைபு ஆக்குவதற்குப் புலவர்கள் பற்றிய விரிவான கற்கை நெறியும், சமூக விழிப்புணர்வும் தேவையாக உள்ளது. புலவர்கள் பற்றிய விரிவான வாழ்க்கை வரலாறு சேகரிக்கப்பட்டு எழுதப்பட வேண்டும் என்பதை இக்காலச் சூழல் எமக்கு உணர்த்துகிறது. பல் பரிமாண ஆய்வுகள் இன்றி இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஒழுங்கமைப்பதில் நாம் வெற்றிபெற முடியாது.

யாழ்ப்பாணத்து பதுறுதீன் புலவரையும் அஸனா லெப்பை புலவரையும், மன்னார் பக்கீர் புலவரையும், புத்தளம் செய்கு இஸ்மாயீல் புலவரையும், கொண்டச்சி ஷரீபுப் புலவரையும், மருதமுனை சின்ன ஆலிம் அப்பாவையும், செய்கு அலாவுதீன் புலவரையும், காத்தான்குடி அப்துல் காதர் புலவரையும் போல் முஸ்லிம்கள் வாழும் ஒவ்வொரு மாகாணத்திலும், பிரதேசத்திலும் பண்பாட்டுப் புலவர் பெருமக்களை முஸ்லிம் சமூகம் பெற்றுள்ளது.

மத்திய மாகாணத்தைப் பற்றி பேசும் போது பெரும் புலவராக நம் முன் காட்சி தருபவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். இவர் தேசிய அளவிலும் தமிழ் நாட்டு இலக்கிய உலகிலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றவர். புலவர் என்ற சொல்லிற்கான பூரண அர்த்தத்தோடும் புலமையோடும் திகழ்ந்தவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்.

அப்துல் காதிர் புலவரின் பேரரான முஸ்லிம் இலக்கிய அறிஞர் அல்லா பிச்சையின் சில வார்த்தைகளை இங்கு நினைவு படுத்தலாம்.

அருள்வாக்கி கண்டி தர்ஹறா வித்துவானாகத் திகழ்ந்ததுடன் அட்டாவதானம் தீப சித்தி முதலிய கலைகளையும் பயின்றார். 1866ஆம் ஆண்டிற்கும் 1918ம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்த அப்துல் காதிர் புலவர் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் இஸ்லாமியக் கவிதை நூல்களை இயற்றி உள்ளார். (இது 1978ல் அல்லா பிச்சை எழுதிய குறிப்பு)

ஆ.பி அல்லா பிச்சைக்கும், ஹவ்வா உம்மாவுக்கும் புதல்வராக அப்துல் காதிர் 1866ம் ஆண்டு ஆகஸ்ட் 30ஆம் திகதி பட்டியகாமம் (புதிய பெயர் தெல்தோட்டை) போப்பிட்டிய என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்தவர்கள். இலங்கையில் வாழ்ந்தாலும் தமிழ் நாட்டுடன் அவர்களுக்குத் தொடர்புகள் இருந்தன. நாற்புறமும் மலைகளால் சூழப்பட்டு இயற்கை எழிலுடன் காட்சிதரும் தெல்தோட்டைக்கு அருகில் இருக்கும் போப்பிட்டியவில் புலவர் பிறந்தார். அந்த ஊரை அழகுபடுத்தும் மலைக்குன்றின் பெயர் புலவர் மலை. அருள்வாக்கியை நினைவு கூரும் வகையில் இன்றும் அந்த மலை புலவர் மலை என்றே அழைக்கப்படுகிறது. அவருக்கும் ஊருக்கும் உள்ள தொடர்பின் அடையாளச் சின்னமாக அந்த மலையை இன்றும் மக்கள் குறிப்பிடுவர். முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி இந்திய வம்சாவளி மக்களுக்கும் உரிமை கொண்டாடக்கூடிய புலவராகவும் இலக்கியப் படைப்பாளியாகவும் அவர் வாழ்க்கை மத்திய மலை நாட்டில் கழிந்துள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 18ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கோப்பிச் செய்கை மும்முரமாக நடைபெற்று வந்தது. தோட்டத் தொழிலில் ஈடுபடக் கூடிய தொழிலாளர்கள் இங்கு அழைத்து வரப்பட்டனர். திருப்புத்தூரில் இருந்து இலங்கை வந்து போப்பிடியவில் கோப்பிச் செய்கையில் ஈடுபட்ட ஆதம்பிள்ளை ராவுத்தரின் மகன் அல்லா பிச்சையின் மனைவிதான் ஹவ்வா உம்மா.

புலவரின் தாயாரான ஹவ்வா உம்மா கண்டியில் வாழ்ந்த பாரம்பரிய குடும்ப வழியில் வந்தவர். கண்டி முஸ்லிம்களின் பாரம்பரியம் பேசும் வம்சங்களில் அவரது வம்சமும் ஒன்று. கண்டி இராசதானியில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் முகாந்திரங்களாகவும், வைத்தியர்களாகவும், செல்வாக்குமிக்க வணிகர்களாகவும் பணிபுரிந்தனர்.

கண்டி இராசதாணியில் அரசவை வைத்தியராக இருந்த மா.மு.நெய்னார் குடும்பத்து வழியில் வந்தவரே ஹவ்வா உம்மா. கண்டியில் இன்று நாம் பார்த்து அதிசயிக்கும் கண்டி நகரை அலங்கரிக்கும் வாவி அன்று வயற் காணியாகவும், சகதி நிறைந்த இடமாகவும் காட்சி அளித்துள்ளது. அந்த இடம் மா.மு. நெய்னாவினால் வாவியாக்கப்பட்டதாக

அல்லது அந்த இடத்தில் வாவியை அமைப்பதற்காக மன்னன் மா.மு. நெய்னாவிடம் இருந்து அக்காணியைப் பெற்றுக் கொண்டதாக ஒரு செய்தி இன்றுவரை நிலவிவருகிறது. அந்த நிலத்தை அல்லது வாவியைப் பெற்றுக் கொண்ட மன்னன் மா.மு.நெய்னாவுக்கு தெல்தோட்டையில் உள்ள பட்டியகாமம் கிராமத்தை சன்மானமாக வழங்கி உள்ளான். கண்டியில் வாழ்ந்து வந்த மா.மு. நெய்னார் தமது குடும்பத்துடன் பட்டியகாமம் பகுதியில் குடியேறி உள்ளார். பட்டியகாமத்தின் ஒரு பகுதியில்தான் புலவர் மலையும் அமைந்திருப் பதாக அருள்வாக்கி அப்துல் காதிர் வாழ்க்கை வரலாற்றை எழுதிய கண்டியைச் சேர்ந்த கல்வியியலாரும் வரலாற்றாசிரியருமான எஸ்.எம்.ஏ. ஹஸன் கூறுகிறார்.

ஆரம்பத்தில் குர்ஆன் மத்ரஸாவிலும் தமிழ் வித்தியாலயத்திலும் சேர்ந்து மார்க்கக் கல்வியையும் தமிழ் கல்வியையும் வளர்த்துக் கொண்டார். கண்டியில் அப்போது பிரசித்தி பெற்றிருந்த குயீன்ஸ் அகடமியில் சேர்க்கப்பட்டார். அங்கு ஆங்கிலமும் தமிழும் கற்றார். சிறுவயதிலேயே அவர் தமது தமிழ் ஆர்வத்தை வெளிப்படுத்தினார். பாடல்கள் இயற்றி மக்களைக் கவர்ந்தார்.

இலக்கியத்தில் அவரது ஈடுபாடு அதிகமாக இருந்தது. அவரது அடுத்த கட்ட கல்வியைத் தீர்மானிக்கும் நேரம் வந்தது. பெற்றோர் அவரைத் தமிழ் கற்பதற்காக மதுரை ஜில்லா திருப்புத்தூருக்கு அனுப்பினர். திருப்புத்தூர் அவரது முன்னோர்களின் ஊர். அங்கு தமிழ் வித்யாசாலையில் சேர்க்கப்பட்டார். அதன் பிரதம ஆசிரியரான வித்துவ சிரோண்மணி, மதுரகவி நாவலர் மஹ்மூது முத்துவாப்பாப் புலவரிடம் தமிழ் மொழியையும் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

அவரது இலக்கியச் செயற்பாடுகள் மதுரை ஜில்லாவிலேயே ஆரம்பமாகிவிட்டன. தமது இலக்கிய ஆசான்களின் பாராட்டுக்களைப் பெற்றதோடு பொதுமக்களின் மனதிலும் இடம்பிடித்தார். பழந்தமிழ் இலக்கியம், செய்யுள்கள் பற்றி அவர் பேசினார். அவருடைய சில நூல்கள் திருப்புத்தூர் அச்சகத்திலேயே புதுப்பிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் திருப்பத்தூரில் இருந்த இந்தத் தொடர்புகள் காரணமாகவும் அவருடைய புகழ் காரணமாகவும் திருப்புத்தூர் மக்கள் அப்துல் காதிர் புலவரை பெரிதும் கொண்டாடினர். பனைக்குளம் அப்துல் மஜீத் புலவர் எழுதிய தமிழ் நாட்டு இஸ்லாமியப் புலவர்கள் நூலில் அவர் திருப்புத்தூர் தமிழ்நாட்டுப் புலவராகவே அடையாளமிடப்பட்டிருந்தார். அவர் பிறந்த மண்ணில் பெற முடியாத பெயரையும் புகழையும் அங்கீகாரத்தையும் திருப்புத்தூர் அவருக்கு வழங்கியது. அதனால் சிலர் அவரை தமிழ் நாட்டுப் புலவர் என அடையாளம் காண முற்பட்டனர்.

தமிழ்ப் புலமையோடு இஸ்லாமிய இலக்கியங்களிலும் இஸ்லாமிய ஞானச் சிந்தனைகளிலும் போதுமான அறிவைத் தமிழ்நாட்டுக் கல்வி அவருக்கு வழங்கியது. சூபி தியான முறைகள், அவை பற்றிய சிந்தனைகள், இஸ்லாமிய சன்மார்க்க அறிவு, ஒழுக்கவியல் கருத்துக்களைப் பேசும் அல்லது பாடும் புலவர்களுக்குப் பெருமதிப்புத் தரப்பட்ட காலம் அது. இத்துறைகளில் தன்னை வளர்ப்பதற்குரிய எல்லாக் கல்வி முயற்சிகளிலும் அறிவுப் பயிற்சிகளிலும் புலவர் கவனம் செலுத்தினார்.

அக்காலக் கல்வி முறையில் குறிப்பாகப் புலவர்களின் ஆற்றலை மதிப்பிடும் முறைகளில் அவதான முறைகளும் பரீட்சிக்கப்பட்டன. இதற்கு அறிவு, புலனுணர்வு, நுண்மதி சார்ந்த அவதானப் பயிற்சிகள் தேவை. அப்துல் காதிர் புலவரும் இந்தப் பயிற்சிகளில் ஈடுபட்டார்.

பல இலக்கிய நிகழ்ச்சிகளில் புலவர் தனது 'அட்டாவதான' திறமையை நிரூபித்துள்ளார். அதனால் அருள்வாக்கியை அட்டாவதானி அருள்வாக்கி என்றும் மக்கள் அழைத்தனர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரிசையில் முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கியங்களை அவர் படைத்துள்ளார். தமிழில் காணப்படும் பல்வேறு செய்யுள் வடிவங்களை அவர் கையாண்டு தனது தமிழ் ஆய்வுகளையும் இலக்கியம் படைக்கும் திறனையும் வெளிப்படுத்தி உள்ளார். சந்தத்திருப்புகழ், திரு மதீனத்தந்தாதி மாலை, ஆரிபு மாலை, வழிநடை பைத்து மாலை, பிரான் மலைப்பதிகம், கண்டி செய்கு ஷிகாபுதீன் பதிகம், சலவாத்துப் பதிகம், பதாயிடுப்பதிகம், திருபகுதாதந்தாதி, கண்டிக் கலம்பகம், மெஞ்ஞானக் குறவஞ்சி, திருச்சந்தப் பிள்ளைத்தமிழ் என்று முப்பது படைப்புக்களை அவர் இயற்றி உள்ளார்.

பிரபந்தபுஞ்சம், காட்டு பாவா சாகிபு கும்மி, காரணப் பிள்ளைத்தமிழ், பிரான் மலைப் பதிகம், பேரின்ப ரஞ்சித மாலை போன்ற சில நூல்கள் தான் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை 2018இல் வெளியிட்ட அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் (மரணித்த) நூற்றாண்டையொட்டி ஒரு சிறப்பிதழை வெளியிட்டது. பெரும் சிரமங்களுக்கு மத்தியில் புலவரின் பதினாறு நூல்களை அந்த பதிப்பில் அதன் ஆசிரியர்கள் இணைத்துள்ளனர். அடைக்கல மாலை (பிரபந்தப்புஞ்சம், 1901), அருள்மணி மாலை (பிரபந்தப்புஞ்சம் 1901), காரணப் பிள்ளைத்தமிழ் (1895), காட்டுபாவா சாகிபு கும்மி (1905), கண்டிப்பதிற்றுப் பத்தந்தாதி (1901), சந்தத் திருப்புகழ் (1909), முனாஜாத்து (1901), எண்கலை வண்ணம் (1901), எண்கலை வன் மெல்லிசை வண்ணம் (1901), தஸ்பிஹுல் முறீதீன் (வசனநடை ஆக்கம், 1911) வழிநடை வைத்து மாலை உட்பட பல்வகை தனிப்பாடங்களையும் அந்த சிறப்பிதழ் வெளியிட்டது. 2018 ஆம் ஆண்டுக்கு

முன்பிருந்ததைவிட அருள்வாக்கியின் படைப்புக்கள் பற்றிய வாசிப்பிலும் ஆய்விலும் ஞானம் சஞ்சிகையின் அருள்வாக்கி அப்துல் காதிர் நூற்றாண்டுச் சிறப்பிதழ் ஒரு பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது உண்மை.

வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு அரிய பணி என்று பேராசிரியர் எம்.ஏ. நு.ஃமான் இந்த முயற்சியைப் பாராட்டி இருந்தார். இதற்காக முயற்சிகளை மேற்கொண்ட ஞானம் சஞ்சியை ஆசிரியர் டாக்டர் ஞானசேகரனையும் ஞானம் பாலச்சந்திரனையும் முஸ்லிம் சமூகமும் தமிழ் பேசும் உலகும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

அருள்வாக்கியின் பதினொரு படைப்புகளை இன்று நாம் ஒரே பார்வையில் பார்ப்பதற்கு நூற்றாண்டு மலர் வழிசெய்துள்ளது. இதுவரை பதிக்கப்படாத புலவரின் பல தனிப்பாடல்கள் புதிதாக இச்சிறப்பிதழில் இணைக்கப்பட்டுள்ளன. அன்று ஒரு சில புலவர்களிடம் மட்டுமே காணப்பட்ட புலவரின் பல சிறப்புத் திறமைகளையும் அவரது தமிழ் புலமை ஆற்றல்களையும் இச்சிறப்பிதழ் விளக்கமாகக் கூறுகிறது. அவரது அட்டவதானம், மக்கள் முன்னிலையில் அவர் நிகழ்த்திக்காட்டிய தீபசித்தி, பொருட்சித்திரமும் அமையப்பெரும் வண்ணம் அவரால் பாடப்பெற்ற சித்திரகவி செய்யுள்கள் பற்றியும் விபரமான குறிப்புகள் அந்த நூற்றாண்டு இதழில் பதிவாகி இருப்பதைக் காணமுடிகிறது.

அருள்வாக்கியை மீள இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்த எஸ்.எம்.ஏ ஹஸனின் சேவைகள் அளப்பரியவை. எனசல்கொல்லயில் அதிபராகப் பணி புரிந்த போது புலவர் மலையைக் காணும் வாய்ப்பை ஹஸன் பெறுகிறார். அதைப்பற்றி ஹஸன் இப்படிக் கூறுகிறார்.

“புலவர் மலையில்தான் அந்த பாடசாலை இருந்தது. முதன் முறையாக எனசல்கொல்ல முஸ்லிம் மகா வித்தியாலயத்தைப் பார்வை இடச் சென்றேன். அங்கிருந்து பார்த்த போது சுற்றிவர மலைகளும் தேயிலைத் தோட்டங்களும் பாய்ந்து செல்லும் நீரோடைகளும் பார்ப்பதற்கு ரம்யமாக இருந்தன. அந்த மலையடிவாரத்தில் பாடசாலை இருந்தது.”

புலவர் மலையில் ஒரு புலவரின் சரித்திரம் புதையுண்டு இருப்பதை ஹஸன் தெரிந்து கொண்டார். அக்கிராமத்தில் வாழ்ந்த மூத்த பரம்பரையினர் மூலமும் புலவரின் உறவினர் வழியாகவும் அருள்வாக்கி அப்துல் காதிர் பற்றிய தகவல்களைச் சேகரித்தார். புலவரது உருவப்படம், அவரது நூல்கள், அவருக்கு வழங்கப்பட்ட பாராட்டுப்பத்திரங்கள், அவர் பயன்படுத்திய பல வகைபொருட்கள் முதலியவற்றை ஹஸன் தேடிக்கண்டு பிடித்தார்.

புலவர் மலையின் புலவரை ஹஸன் 1965இல் எடுக்கப்பட்ட நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் மூலம் உலகறியச் செய்தார்.

வித்துவதீப அருள்வாக்கி அப்துல் காதிரைக் கௌரவித்து 30 ஆகஸ்ட் 1965இல் தினகரன் ஒரு நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியிட்டது. "ஈழத்து மலையகம் தந்த அருள்வாக்கி, வித்துவதீப, அருள்வாக்கி அப்துல்காதிர் புலவர் தமிழ், ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த பேரறிஞர். இயற்கையாகவே அருட்கவி பாடும் திறனைப் பெற்றவர்" என்று ஆசிரியத் தலையங்கம் தீட்டியது தினகரன். அந்த விழாவின் வெற்றியின் பெரும் பங்கு எஸ்.எம்.ஏ ஹஸனின் அயராத முயற்சியிலேயே தங்கியிருந்தது.

புலவருக்கு முத்திரை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார். அதைத்தொடர்ந்து அருள்வாக்கி அப்துல் காதிர் என்ற ஆராய்ச்சி நூலை 1973இல் எஸ்.எம்.ஏ ஹஸன் வெளியிட்டு நிரப்பப்படாதிருந்த பெரிய இடைவெளிக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அப்துல் காதிர் புலவர் திருப்புத்தூரைச் சேர்ந்தவர் அவர் இலங்கையைச் சேர்ந்தவரல்ல என்ற சிலரின் அடிப்படை அற்ற கருத்துக்களை அருள்வாக்கி அப்துல் காதர் நூல் முற்றாக நிராகரித்தது. புலவர்கள் பற்றி முஸ்லிம்களால் எழுதப்பட்ட ஆய்வு நூல்களில் முதன்மையான நூல் அது என்பது எனது மதிப்பீடு.

மத்திய மலை நாட்டிற்கான முன்னோடி இலக்கியக் கர்த்தாவைக் கண்டு பிடித்த வரலாறாக இதனை நாம் விவரிக்கலாம்.

"தமிழ் இலக்கிய மரபிலும் இஸ்லாமிய ஆன்மீக மரபிலும் ஆழ வேரூன்றிய பெரும் புலவர்களுள் அப்துல் காதிர் புலவர் ஒருவர்" என்ற பேராசிரியர் எம்.ஏ. நு.ஃமானின் கூற்று தமிழ் கூறும் நல்லுலகில் அவர் பெற்ற பல உயர் மதிப்பீடுகளின் மற்றொரு எதிரொலியாகும்.

"இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பாக ஈழத்து இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அருள்வாக்கிக்குத் தலையாய ஓர் இடமுண்டு" என்ற பேராசிரியர் சி. தில்லைநாதனின் கூற்றும் "இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரிசையில் முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்துத் தமிழ் இலக்கியத்தை அணி செய்துள்ள பெருமை அப்துல் காதிர் புலவருக்கு உரியதாகும்." என்ற பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்களின் மதிப்பீடும் புலவரின் பெருமைக்குச் சான்று பகர்கின்றன.

இப்புகழுரைகளில் எவ்வித ஆச்சரியமுமில்லை. அப்துல் காதிர் புலவரின் இலக்கிய ஆளுமைக்கும், புலமைக்கும், அறிவுத்தரத்திற்கும் கிடைக்கப்பெற்ற உண்மை

மதிப்பீடுகளே இவை. இப்பெருமை அவர் பிறந்த பட்டியகாமத்திற்கும் தர்ஹா வித்வானாக இலக்கிய ஆட்சி செய்த கண்டிக்கும் உரியதாகும்.

ஆனால், அப்துல் காதிர் புலவரை முஸ்லிம் இலக்கிய உலகம் மீளக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. படைப்புக்களின்றிப் பெயரினால் மட்டும் அறியப்பட்ட ஒருவரைப்பற்றி எப்படி பெருமைப் பேசுவது. அப்துல் காதிர் புலவரை மீளக் கண்டு பிடிப்பதன் தேவை ஒன்று இருந்ததைப் பற்றி சி. தில்லைநாதன் கூறியதை இங்கு நோக்கலாம்.

"1965ஆம் ஆண்டில் அருள்வாக்கி வாழ்ந்த மண்ணிலே அவருக்காக ஒரு விழா எடுக்கப்பட்டது. அதன் பின்னரே நம்மிற் பலர் அவரைப்பற்றி எண்ணவும் ஓரளவு விரிவாகவும் அறியத் தலைப்பட்டோம். ஆயினும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எமது பல்கலைக்கழக மாணவர்களுக்கு அருள்வாக்கியின் செய்யுட்களை அறிமுகப்படுத்த முற்பட்டபோது அது சிரமமாக இருந்தது". ஒவ்வொரு சிறிய விடயத்துக்கும் நீண்டகாலக் காத்திருப்பு தேவையாக இருந்தது. சமூக எழுச்சிக்காகவும் கல்வித் தேவைகளுக்காகவும் நிகழ வேண்டிய முயற்சிகள் தடைபட்டன. இதுதான் உண்மை நிலை.

எனினும் சமூக எழுச்சி எண்ணங்கள் இளைஞர்களிடையே பரவும் போதுதான் முன்னேற்றத்திற்கான வாயில்கள் திறக்கின்றன. பண்பாட்டு முதுசங்களைப் பாதுகாப்பது, அறிவது, அவற்றை மீள விவாதிப்பது ஆரோக்கியமான சமூக உணர்வுகளுக்கும், இன அடையாள எண்ணங்களுக்கும் உந்து சக்தியாக அமைகின்றன. புலவர்களையும், அறிஞர்களையும் தேடிக் காண்பதன் தவிர்க்க முடியாத அரசியல் இதுதான். கல்வி பெரிய விழிப்புணர்வாகும். பிற்பட்ட சமூகங்களுக்கு அது ஒரு பேராயுதம். அதிலிருந்து பல மாற்றங்கள் விளைகின்றன.

அருள்வாக்கி விடயத்திலும் இதுதான் நடந்தது. பேராசிரியர் தில்லைநாதனின் கூற்றினையே மீண்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"அருள்வாக்கி படைத்த இஸ்லாமியத் தமிழ்ப் பிரபந்தங்கள் இருக்கின்றன. இருந்தும் இலங்கை வாழ் இஸ்லாமியர்களிடையில் ஒரு மத்திய தர வர்க்கம் தலைதூக்கும் வரைக்கும் அவர்கள் தேசிய கலாசார விழிப்புணர்ச்சி பெற்றுப் பாரம்பரியத் தன்னுணர்வோடு தமது கலாசாரப்பரப்பின் தடங்களைத் தேடும் வரை அருள்வாக்கி மறக்கப்பட்டே இருந்தார்".

இப்போது நிகழும் இந்த இரண்டாவது எழுச்சி தெல்தோட்டை மக்களினதும் இளம் சமுதாயத்தினரதும் விழிப்புணர்வாக மலர்ச்சி பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இது

போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு.

19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதி முஸ்லிம்களைப் பொறுத்தவரை வரலாற்று ரீதியான நிகழ்வுகளின் காலப்பகுதி. அறிஞர் சித்திலெப்பை 1870களில் தமது கல்வி மற்றும் சீர்த்திருத்தப் பணிகளை ஆரம்பித்து சமூக மாற்ற எழுச்சிக்கு மக்களை தயார்படுத்துகிறார்.

அக்குறனையிலிருந்து மார்க்கக் கல்வியை வளர்ப்பதில் பெரிய சேவைகளை ஆற்றி வந்த கசாவத்தை ஆலிம் புலவரின் செயல்திறன் மிக்க பணிகள் நடந்ததும் இதே காலப்பகுதியில் தான். சரியாகக் கூறுவதானால் தமிழிலும் அரபு மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற புலவர் அவர்.

எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்டு குடும்பத்தோடு இலங்கை வந்த விடுதலைப் போராட்டத் தலைவர் ஒறாபி பாஷா கண்டியில் வாழ்க்கையைத் தொடங்கியதும் இக்காலப் பகுதியில் தான். அப்போது இளைஞராக இருந்த அப்துல் காதிர் புலவருக்கு அறிஞர் சித்திலெப்பையோடும் கசாவத்தை ஆலிம் புலவரோடும் தொடர்புகளிருந்தன. சித்திலெப்பையின் கடைசிப் பத்து ஆண்டுகளில் இத்தொடர்புகள் நிகழ்ந்ததாகக் கருதலாம். ஆனால் இவர்களுக்கிடையிலான தொடர்புகள் பற்றி மிகக் குறைவான தகவல்களையே பெற்றுள்ளோம்.

புலவரின் வாழ்க்கை வரலாற்றைக் கவனமாக ஆராய்ந்தால் அவருடைய தாயார் வழியில் சித்திலெப்பை குடும்பத்தோடு அவருக்கு உறவு இருந்ததாகத் தெரிகிறது.

கசாவத்தை ஆலிம் புலவரிடம் இருந்து மார்க்க அறிவையும் சூபிஞானக் கருத்துக்களையும் அவர் கற்றுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. அரபு மொழியிலும், தமிழிலும் தேர்ச்சி பெற்று ஆன்ம ஞானத்திலும் தீவிர ஈடுபாடு காட்டிய அருள்வாக்கி, கசாவத்தை ஆலிம் புலவரோடு சந்திப்புக்களை மேற்கொண்டிருப்பார் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான். கசாவத்தை ஆலிமின் ஞானப்பாதையின் கற்றல் முறையும் (அவர் தமிழ்நாட்டில் மார்க்கக் கல்வி பயின்று பட்டம் பெற்றவர்) அப்துல் காதிர்ப்புலவரின் ஞானப்பாதையும் ஒரு வழிப்பாதையாகவே இருந்தது.

சித்திலெப்பையின் சீர்த்திருத்தச் செயற்பாடுகள் மற்றும் நவீன கல்விக்கான போராட்டங்களில் அருள்வாக்கி பங்குகொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் சித்திலெப்பையை அமைதியாக ஆதரித்தவர்களில் அவரும் ஒருவர் என்று கூறலாம்.

சூபிஞானக் கருத்துக்களுக்கும் சித்திலெப்பைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. சூபிஞானச் சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் அவர் ஆர்வம் காட்டினார். தான் கற்றறிந்த சூபித்துவப் பாதையைப் பற்றி 'அஸ்ராருல் ஆலம்' (உலகங்களின் இரகசியம்) என்ற நூலை சித்திலெப்பை வெளியிட்டார். அந்த நூலை ஒரு பிரிவினர் கடுமையாக எதிர்த்தனர். அஸ்ராருல் ஆலத்தைக் கண்டித்து மறுப்புரைகளும் வெளியிடப்பட்டன. அப்துல் காதிர் புலவர் சித்திலெப்பையின் சூபித்துவக் கருத்துக்களுக்கு ஆதரவளித்துள்ளார்.

ஹஸரத் சாகுல் ஹமீது ஆலிமுல் காதிரி அவர்கள் தொகுத்த அப்துல் காதிர் புலவரால் இயற்றமிழில் வசன நடையாக்கம் செய்யப்பட்ட 'தன்பீஹுல் முறீதீன்' (1911) (ஞான தீட்சை பெறுபவன் அறிய வேண்டியது) குறிப்பிடத்தக்கது.

சித்திலெப்பையின் 'அஸ்ராருல் ஆலம்' நூல் தொடர்பில் அப்போது நடந்து கொண்டிருந்த விவாதங்கள் விமர்சனங்களில் அப்துல் காதிர் புலவர் சித்திலெப்பையின் ஞானக் கருத்துக்களுக்கு ஆதரவாக எழுதப்பட்ட சூபிஞான நூல் என்று பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால், சித்திலெப்பைக்கு ஆதரவாக எழுதப்பட்ட நூல் என்பதற்கு அந்த நூலில் எந்த ஆதாரமும் தரப்படவில்லை. மேலும் அந்த நூலின் வசன நடையாக்கம் மட்டும்தான் அருள்வாக்கியின் பங்காக அமைந்திருப்பதை நூலில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் மூலமாக அறிய முடிகின்றது. ஆனால் சூபிஞானப் பாதையையும் சூபித்துவ கோட்பாடுகளையும் விளக்குவதே அந்த நூலின் நோக்கம் என்பதில் ஐயமில்லை.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றப்பட்டு வந்த சூபிஞான உரைகளிலிருந்தும் மெய்யியல் ஞானி இமாம் அல் – கஸ்ஸாலி மற்றும் சில சூபிஞான அறிஞர்களின் கோட்பாடுகளிலிருந்தும் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அரபு மூலத்திலிருந்து பெற்ற கருத்துக்களையும் உள்ளடக்கியதாகக் காசிப்பட்டணம் சாகுல் ஹமீதினால் தொகுக்கப்பட்டதைத்தான் அருள்வாக்கி இயற்றமிழ் நடையில் வசனமாக கட்டுரை வடிவில் தந்துள்ளார்.

அரபு மொழியில் தரப்பட்டவற்றைத் தமிழாக்கமாகத் தரும் பணியையும் அருள்வாக்கி செய்திருக்கலாம். அது புலவரால் எழுதப்பட்ட நூல் அல்லவாயினும் அவரது மார்க்க மற்றும் சூபிஞானப்பாதைக்கு நெருக்கமான நூலாக அது இருந்தது.

அன்று தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்த ஹஸரத் செய்கு அப்துல் காதிர் தைக்கா சாகிபு வஹியின் ஞானப்பாதையே இந்த நூலின் மையக்கருத்தாக அமைந்திருக்கலாம். காசிப்பட்டணம் சாகுல் ஹமீதும்

அருள்வாக்கி அப்துல் காதிரும் மேற்கொண்டிருந்த சூபிஞான வழிமுறையாகவும் இது இருந்திருக்கலாம். 'அஸ்ராருல் ஆலம்' நூலில் சில அடிப்படைகளும் தஸ்பீஹுல் முரீதீன் நூலில் இடம் பெற்றிருக்க வாய்ப்புள்ளது.

சூபிப்பாதையும் சூபிஞானச் சிந்தனைகளும் செய்யுளாகவே பாடப்பட்டு வந்த காலத்தில் இஸ்லாமிய மறை ஞான மெய்யியலை வசன நடையில் சித்திலெப்பை எழுதினார். தத்துவ விசாரக் கருத்துக்களை வசன நடையில் சிறப்பாக வெளிப்படுத்தும் நூல் 'அஸ்ராருல் ஆலம்'. ஏறத்தாழ அதே பாணியில் சூபித்துவக் கருத்துக்களை 'தஸ்பீஹுல் முரீதீன்' இயற்றமிழ் வசன நடையில் தருகிறது. அந்த வசன நடைக்குச் சொந்தமானவர் அப்துல் காதிர் புலவர். முஸ்லிம்களின் இலக்கிய வரலாற்றில் மெய்யியல் சிந்தனைகள் வசன நடைக்கு மாற்றம் பெற்ற வரலாற்றை எழுதும் போது சித்திலெப்பையின் பாணியும், அப்துல் காதிர் புலவரின் முயற்சியும் நிச்சயம் போற்றப்படும்.

வித்துவத் திலகமாகவும், புலவராகவும், அட்டாவதானியாகவும் மட்டுமன்றி மக்கள் கவிஞராகவும் அப்துல் காதிர் விளங்கினார். அவரது செய்யுள் வடிவக் கவிதைகளை நோக்கினாலும் ஒப்பீட்டு ரீதியில் எளிமையின் சாயலை நாம் காணலாம். பொதுமக்கள் இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தியும் இசை வடிவங்களிலும் அவர் பாடல்கள் இயற்றினார்.

புலவரின் இலக்கிய சன்மார்க்கப் போதனைகளாலும் மக்கள் கவரப்பட்டனர். இதிகாசங்கள், மெய்யியல் இலக்கியங்கள், ஒழுக்க நெறிகள், மார்க்க சிந்தனைகள், சூபிக்கருத்துக்கள் என பல விடயங்களில் அவர் பிரசங்கம் செய்தார். அவரது இலக்கிய மற்றும் அறிவுப் பணியின் முக்கியப் பகுதியை அவர் பிரசங்களிலும் செலவிட்டுள்ளார். அவை பற்றிய பதிவுகள் இல்லை. இது வருத்தத்துக்குரியவை.

1912ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற சு.மு. ஹசனார் லெப்பைப் புலவர் தலைமையில் மூன்று வாரங்கள் அருள்வாக்கி சொற்பொழிவாற்றி உள்ளார். மூன்றுவாரச் சொற்பொழிவு முடிவில் 'வித்துவதீபம்' என்று பட்டமளித்து யாழ்ப்பாண மக்கள் அவரைக் கௌரவித்தனர். மார்க்க, ஆன்மஞான விடயங்கள் பற்றியே அவரது சொற்பொழிவு இடம்பெற்றுள்ளது.

சொற்பொழிவுகள் நடந்த சபையில் ஹசனாலெப்பைப் புலவர் எழுதி அளித்த பட்டமளிப்புப் பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் பதிவு பெற்றுள்ளன.

'இவர்களை (ம..ஃளறதுல் ஐதுரூஸியா) என்னும் நமது மக்காமில் தரீக்காவைச் சார்ந்தவர்களினதும் ஏனையோர்களினதும் பிரயோசனம் கருதிப் பலராலும் ஒப்புக்

கொள்ளப்பட்ட நூற்களிலிருந்து இல்முகளடங்கிய (அறிவுகளடங்கிய) செய்யுட்களைத் தெரிந்து, வேண்டிய இல்முகளை எடுத்து ஒருவாறு பிரசங்கிக்குமாறு கேட்டுக் கொண்டோம். அவர்கள் அவ்வாறு மூன்று வாரங்கள் பிரசங்கித்திருக்கிறார்கள். அது மிகுதியும் பாராட்டிப் புகழத் தக்கதாகவே நடந்திருக்கிறது. பலதும் விடயத்தை விளக்கப்படுத்துவதில் அவர்கள் சாதுர்யம் வியக்கத்தக்கதே. அவற்றிற்குப் பல பண்டைச் செய்யுட்களிலிருந்து மேற்கோள் கூறும் நிபுணத்துவம், மிக ஆச்சரியப்படத்தக்கதேயாகும்.

'தஸ்பீஹுல் முறீதீன்' நூல் வெளிவந்து அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 1912இல் இந்தப் பிரசங்கத்தை அருள்வாக்கி நிகழ்த்தி உள்ளார்.

## இலக்கியம்

இடைக்காலச் செய்யுளில் அவருக்கு ஆழமான புலமை இருந்தது. பல்வேறு பிரபந்தங்களை அவர் பாடி உள்ளார். அவற்றுள் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படும் நூல் நபிகளார் பேரில் புலவர் பாடியுள்ள சந்தத் திருப்புகழ். ஒவ்வொரு பாடலும் வெவ்வேறு சந்தத்தில் அமைந்த நூறு சந்தப் பாடல்களால் இந்தப் பிரபந்தத்தை அருள்வாக்கி இயற்றியுள்ளார். அருண கிரிநாதரின் சந்தப்பாடல் சிறப்பினை அருள்வாக்கியின் சந்தத் திருப்புகழிலும் காண முடிகிறது என இலக்கிய ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அப்துல் காதிர் புலவர் இயற்றிய பிரான் மலைப் பதிகம் 1887இல் சென்னையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது பிரான்மலையில் சிறப்புற்று விளங்கும் செய்கு அப்துல்லா வலியின் பெயரில் இப் பிரபந்தம் பாடப்பட்டுள்ளது. அருள்வாக்கியின் அச்சேறிய முதல் நூலாகவும் இது கொள்ளப்படுகின்றது. அப்போது புலவர் 21 வயது இளைஞர்.

கண்டி மீரா மக்காம் தர்ஹா வரலாற்றுச் சிறப்புமிக்கது. அந்த தர்ஹாவை கண்டி மக்கள் பெரிதும் கொண்டாடிய காலம் இருந்தது. புலவரின் காலத்தை அதன் உச்சமான காலம் என்று குறிப்பிடலாம். அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள செய்கு ஷிஹாபுதீன் வலியுல்லா பேரில் அப்துல் காதர் புலவர் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். அருள் மணிமாலை என்ற ஒரு மாலை வடிவப் பாடல் தொகுதி ஒன்றையும் அவர் இயற்றியுள்ளார். ஷிஹாபுதீன் வலியுல்லாவை அவர் ஞானாசிரியாகக் கொண்டிருந்தார். மீரா மக்காம் தர்ஹாவில்தான் அவர் தர்ஹா வித்துவானாகவும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள சில பிரதான ஸியாரங்கள் அல்லது இறைநேசர்களின் அடக்கஸ்தலங்கள் பற்றி பல மாலைகளையும் பிரபந்தங்களையும் பாடியுள்ளார்.

**விண்ணளாவிய**
**மேனிலைக் கோபுரக்**
**கண்ணளாவில்**
**காதலர்க் காதலாள்**
**பண்ணளாவிய**
**பாவையரார் கண்டித்**
**தண்ணளாவிய**
**தாபரக் குன்றமே**

ஷிஹாபுதீன் வலியை கண்டி நகர்க் கற்பகமே, கண்டி நகர்க்கதிபதியே, கண்டி நகர்ச் செம்மலே என்று கண்டி நகரை இணைத்து பல புகழாரங்களையும் சூட்டியுள்ளார்.

காட்டுபாவா வலியின் தியாக வரலாற்றையும் அவர் நிகழ்த்திய பல அற்புதங்களையும் இக்கும்மிப் பாடல் கூறுகிறது. காட்டுபாவா வலி வாழ்வில் நடந்த சில சம்பவங்களையும் பின்னர் சென்னை நவாபினால் கட்டப்பட்ட தர்ஹா கட்டிடத்தின் ஆழகையும் மண்டபத்தின் அலங்காரத்தையும் இக்கும்மிப் பாடல் வர்ணிக்கிறது. அங்கு ஆண்டு தோறும் எடுக்கப்பட்ட சந்தனக் கூடு பற்றிய விபரங்களும் அதன் அலங்காரமும் அருள்வாக்கியினால் இப்பாடல்களில் கூறப்படுகிறது. கூடு அலங்காரப் பவனி தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பல தர்காக்களின் முக்கிய கலாசார நிகழ்வாக கொடிகட்டிப் பறந்த காலத்து வர்ணனை இது.

**செடி விளக்குகள் சன்மானம் பல**
**தீவெட்டி பொற் கொடி மாதானம்**
**செடி விளங்கிடவே சந்தனக் கூடு**
**கீர்த்தியுடனே வருஷாந்தம்**
**வண்ண வண்ணப்பல காகிதத்தாலதின்**
**வருணந்தங்க நிறத்தழகால்**
**இன்ன மனேகவித நிறத்தாலதை**
**இணைத்தலங்கரித்தே மகிழ்வாய்**

என்றும் வீதிக்கு வீதி பவனிவரும் கூட்டில் அலங்காரத்தையும் புலவர் பாடி உள்ளார்.

அரபு பைத்துக்களில் (கஸீதாக்களில்) காணப்படும் சந்த அமைப்பிள் உத்தி முறைகளைக் கையாண்டு தமிழ்ப் பாடல்களையும் அருள்வாக்கி பாடியுள்ளார். செய்கு சுலைமான்

(வலி) பற்றிய நடைபைத்தில் அதாவது வழிநடைச் சிந்துவில் பாடியிருக்கும் ஒரு பாடலை எஸ்.எம்.ஏ. ஹஸன் தமது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

**ஆதி நாதன் வேதவாய்மையோது**
**நவநீதரே**
**சாதிமா மணியெனத் தகும்**
**தலைமானல் வலீ (லாஇலாக)**

வழிநடை பைத்து மாலையில் இப்பாடல் அமைந்துள்ளது. வழிநடைச் சிந்து 19ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்களிடையே கிராம மட்டங்களில்கூட பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு எளிய இசை பாடல் வகை.

செய்கு சுலைமான் வலி மாத்தளையில் உள்வத்துப்பிட்டியில் அடக்கம் பெற்றுள்ளார். வழிநடைச் சிந்துகளாக வழிநடைபைத்து மாலையில் இந்த பாடல் இடம்பெறுள்ளது.

புலவர் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் போது அறிஞர் சித்திலெப்பைக்கும் புலவருக்கும் உள்ள தொடர்புகளையும் அறிய முடிகிறது. குத்பு நாயகம் அப்துல் காதிர் ஜெய்லானி பேரில் புலவர் பாடிய பிள்ளைத்தமிழ் பிரபஞ்சம் முஹிய்யதீன் ஆண்டகை காரணப்பிள்ளைத் தமிழ் என்ற பெயரில் 1895ல் வெளிவந்தது.

நூறு பாடல்கள் அடங்கிய இப்பிள்ளைத்தமிழ் பிரபந்தத்திற்கு உமறுப்புலவரின் பேரரான அபூபக்ர் நெய்னாப் புலவர் சாற்றுகவி பாடி உள்ளார். இப்பாடல் நூலை எழுதியதற்காக 'ஞானங்கள் நிறைந்த அட்டாவதானப் புலவருக்கு அல்லாஹ் ரஹ்மத் செய்ய வேண்டும்" என்று அறிஞர் சித்திலெப்பை புகழ்ந்து எழுதி உள்ளார்.

சித்திலெப்பை வபாத்தான போது சித்திலெப்பை பேரில் அருள்வாக்கி பாடிய இரங்கற்பா முஸ்லிம் நேசனில் (1898) பிரசுரமாகியது. அந்த நீண்ட இரங்கற்பா சித்திலெப்பை மீது அப்துல் காதிர் புலவர் வைத்திருந்த பேரபிமானத்துக்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது.

**மகாகனம் பொருந்திய சித்திலெப்பை**
**மரைக்கார் முகம்மது காசிம்**
**மரைக்கார் பேரில் தேகவியோகப் புலம்பல்**

**சீர் நிறைந்த தாமரைப்போற் சிறந்த விழி நோக்கும்**
**பார் நிறைந்த கீர்த்திப் பரப்பை விரித்தோரே**
**கார் நிறைந்த கையாற் கவிஞர்க்குதவுஞ் செல்வப்**
**பேர் நிறைந்த சித்திலெப்பை பெற்றெடுத்த ரத்தினமே**

கற்றவருங் கல்லாருங் கண்டமலின் பயிர் செய்யப்
பெற்றியுடன் அஸ்றாறுலால மழை பெய்தோரே
மற்றெவர்க்கு நேருவமை வைத்துரைப்பேனும் மருமை
கற்றறிஞரன்றி மற்றோர் காணுந்தகையாமோ.

சித்திலெப்பையின் ஆன்மஞானக் கருத்துக்களைக் கண்டித்து முஹம்மது லெப்பை மரைக்கார் எழுதிய மறுப்புரைகளுக்கு காதர் பாஷா சாகிபு என்பவர் தத்துவ பர கண்டத்திக் "காரணா கண்டம்" என்ற எதிர்ப்பு நூலை எழுதினார். அந்த நூலின் கருத்துகளை ஆதரித்து அருள்வாக்கி சாற்றுக் கவியை வழங்கி உள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் மேடைப் பிரசங்கங்கள் வாயிலாக சித்திலெப்பையின் ஆன்மஞானக் கருத்துக்களையும் அஸ்றாருல் ஆலத்தையும் ஆதரித்துக் கருத்துக்களை அருள்வாக்கி மக்கள் மத்தியில் வழங்கி உள்ளார். சித்திலெப்பையின் அஸ்றாருல் ஆலத்தை எதிர்த்து எழுதப்பட்ட நூல்களுக்களுக்கு மறுப்புரைத் தெரிவித்த ஐ.எஸ். எம். அப்துல் அஸீஸ் எழுதிய 'சத்தின் ஞானார்த்தம்" நூலுக்கும் சாற்றுகவி வழங்கி அஸ்றாருல் ஆலத்துக்கான தனது ஆதரவை அருள்வாக்கி வெளியிட்டார்.

*கவிபாடி விளக்கணைத்தல்*

*தூண்டா மணிவிளக்கே துகள்போக்கும்*
*தூயொளியே*

*காண்டற் கரியதோர் காட்சியே வேண்டி*

*எரியவுனை வைத்ததுபோல் எல்லாரும் பார்க்க*

*அரியணையில் நீ நின் றணை*

# 04

# பேருரையாளர் பற்றி...



# பேருரையாளர் அறிமுகம்

நிமிட வித்துவான் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் 155வது ஜனன தினத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் எமது முஸ்லிம் சமூகம் மறந்துள்ள ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்குப் பெருந் தொண்டாற்றிய அவரை நினைவுப் படுத்துவது காலத்தின் தேவையாகும்.

இவ்வகையில் நிமிட வித்துவான் அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரையினை நிகழ்த்த நினைவுப் பேருரை ஏற்பாட்டுக் குழு தீர்மானித்தது. குறித்த நினைவுப் பேருரையினை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மெய்யியல் துறைத் தலைவரும் பேராசிரியருமான எம்.எஸ்.எம். அனஸ் நிகழ்த்தவுள்ளார்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மெய்யியல் துறைத் தலைவர், கலாநிதி, மற்றும் பேராசிரியர், இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் பல்வேறு ஆய்வு கட்டுரைகளையும் பல ஆய்வு நூல்களையும் எமது சமூகத்துக்குத் தந்துள்ளார். 1949.03.07 அன்று புத்தளத்திலுள்ள கற்பிட்டி பள்ளிவாயல் துறையில் ஜனாப் முஹம்மது சாலிஹ் மற்றும் சரிபுன்னிஸா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் இளமானி, முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டத்தினையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்ற ஓர் அறிவு ஆளுமை. அது மட்டுமல்லாமல் கனடா, பிரித்தானியா, மலேசியா இந்தியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் பல ஆய்வுப் பேருரைகளை நிகழ்த்திய ஓர் சிறந்த சொற்பொழிவாளர். தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளில் தேர்ச்சியுடையவர். அகன்ற அறிவினையும் ஆழமான ஆய்வினையும் இவரது ஆய்வு கட்டுரைகளிலும், சஞ்சிகைகளிலும் காணலாம். இதுவரை பல்வேறு தலைப்புகளில் 24 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றில் பெரும்பாலானவை ஆய்வு நூல்களாகும்.

பேராசிரியர் அனஸ் அவர்கள் பல சிறப்பான பண்புகளைக் கொண்ட ஒருவராவார். அமைதியானவர். அகன்ற ஆழமான அறிவு உடையவர். அழகான முறையில் சொற்பொழிவாற்றக் கூடியவர். 1996ம் ஆண்டு அவரது மெய்யியல் மாணவனாக நான் கற்றதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

நன்றி.



# 05

# கௌரவிப்பவர் பற்றி...

# “அருள்வாக்கி நேசன்” விருதுக்குரியவர் பன்னூல் ஆசிரியர் அல்ஹாஜ் S.M.A. ஹசன் அவர்கள்

கன்ஸுல் உலூம் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ.ஹஸன் அவர்கள் 1927ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி பேராதனையில் பிறந்த நாடறிந்த எழுத்தாளர் ஆவார்.

கலாபூஷணம் தமிழ் ஒளி, பேராதனை ஷர்புன்னிஷாவை கரம்பிடித்த அல்ஹாஜ் ஹஸன், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

1944ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியை தொடங்கி, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக கடமை புரிந்து, கல்வி அதிகாரியாகவும், பிரதம கல்வி அதிகாரியாகவும், உயர் பதவியை வகித்து 1987ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். கல்வி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அவர் கண்டி ஒறாபி பாஷா கலாசார நிலையத்தில் 19 வருடங்கள் பணிப்பாளராக தொண்டாற்றினார்.

பன்னூல் ஆசிரியர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. ஹசன் அவர்கள்  தினகரன், தினபதி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். சுமார் 14 நூல்களை எழுதியுள்ளதுடன் சில சிங்களக் கட்டுரைகளையும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

நல்ல பேச்சாளர், வானொலியில் பல சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார். கலை விமர்சனத் துறையில் ஈடுபாடு காட்டிய இவர், இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தில் உப தலைவராகச் செயற்பட்டார்.

இதற்கிடையே, 1965ஆம் ஆண்டு ஆசிரியர் பணிக்காக தெல்தோட்டை எனசல்கொல்ல மகா வித்தியாலயத்திற்கு சென்ற அவர், புலவர் மலை தொடர்பில் அறிந்து அந்த பெயர் வருவதற்கான காரணத்தை ஆராயலானார். புலவர் மலைக்கு பின்னால் மறைந்திருந்த அப்துல் காதிர் புலவரை கண்டு பிடித்து ஈழத்து இலக்கிய வித்துவானை உலகரியச் செய்தார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இலக்கிய பணியாற்றிய அருள்வாக்கி அப்துல்காதிர் புலவருக்கு 1965ஆம் ஆண்டு தெல்தோட்டையில் பெரு விழா எடுத்தார். அத்தோடு, தேசியப் பத்திரிகைகள் ஊடாகவும் புலவரை ஜனரஞ்சகப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். அத்தோடு,

1973ஆம் ஆண்டு அப்துல் காதிர் புலவரைப் பற்றி ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அதன் இரண்டாம் பதிப்பு 1997ஆம் ஆண்டு கல்ஹின்னை தமிழ் மன்றத்தால் வெளியிடப்பட்டது.

இவர் 1969ஆம் ஆண்டு எழுதிய கலாநிதி பதியுதீன் மஹ்மூத் என்ற திறனாய்வு நூலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 1976இல் கண்டி இலக்கிய மன்றத்தால் கலைமாமணி விருதையும், 1993இல் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் கன்சூல் உலூம் சிறப்புப் பட்டத்தையும், 1994இல் மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சினால் பொற்கிழிப் பரிசும், 1999ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயகக் குடியரசின் கலாபூசன விருதையும் பெற்றுக் கொண்டார்.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஆவணப்படுத்தியதன் ஊடாக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் புலவரை ஜனரஞ்சகப்படுத்தியவருமான கன்சுல் அல்ஹாஜ் S.M.A ஹசன் அவர்களை “அருள்வாக்கி நேசன்” எனும் புகழ்மாலை வழங்கி அவரைப் பாராட்டி கௌரவிப்பதில் தெல்தோட்டைச் சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

*சீர்ம　　லர்ந்தொளிர் செய்யவர் சார்தரு*
*　　செய்ய நற்சபை சேர்தரு சீலரே*
*ஏர்ம　　லர்ந்திடு மிச்சபை மீதிலே*
*　　எம்மை யுஞ்சில செப்பிட வேவலால்*
*கார்ந் லந்திகழ் கண்டிநன் னாட்டிலே*
*　　கவின்வ ளர்ந்திட வோங்கிய காவலன்*
*பார்பு கழ்ந்திடு பண்புடைப் பாவலன்*
*　　பத்தி நீடருள் வாக்கியை வாழ்த்துமே.*



# 06

# மனப்பதிவுகள்

# புலவர் மலையில் அருள்வாக்கியின் நினைவாக நினைவகம் ஒன்றை அமைப்பது காலத்தின் தேவை!

ஈழத்து தமிழ் இலக்கியத் துறையில் புகழின் உச்சத்துக்கே சென்றுவிட்ட அருள்வாக்கி அப்துல் காதிர் தொடர்பான மனப்பதிவுகளை வெளிப்படுத்துவதில் அவரின் பேரப்பிள்ளை என்ற வகையில் பெருமிதம் கொள்கிறேன்.

எனது தந்தை மர்ஹூம் பி.எஸ்.ஏ. மஜீட் அன்று எனக்குப் பாடிக்காட்டிய பாடல்கள் இன்றும் என்னில் ஆழப்பதிந்திருக்கிறது. நான் அவரின் பேரப்பிள்ளை என்பது பெருமையாக இருக்கிறது. நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது புலவர் மலையை எனக்கு அடிக்கடி அடையாளம் காட்டிய நினைவுகள் என் மனதில் அசையாதிருக்கிறது. எனது பிறப்பிடம் போப்பிடிய என்பதிலும், நான் அருள்வாக்கியின் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதிலும் பெரும் மன நிறைவு பெறுகிறேன்.

அன்னாரின் நினைவாக அவரது ஓரிரு பாடல்களை இங்கு பதிவிட விரும்புகிறேன்.

**‘சாச்சப்பா என்னை ஏச்சப்பா**
**இளநீர் போச்சப்பா**
**நீ திண்ணை காரப்பா’**

என்று அவரின் உறவினரான சாச்சாவுக்கு இந்தப் பாடலை பாடியிருக்கிறார். அருள்வாக்கி அப்துல் காதரை வெகு நாளாக ஏமாற்றியதற்காக இந்தப் பாடலைப் பாடியிருக்கிறார்.

பாட்டாலே விளக்கேற்றி, பாட்டாலே விளக்கை அணைத்திருக்கிறது இவரது கவித்திறன். போப்பிட்டியவிலிருக்கும் புலவர் மலை இன்னும் வெற்றுக் காணியாகவே இருப்பது வருத்தத்தைத் தருகிறது.

வெற்றுக் காணியாக இருக்கும் புலவர் மலையில் அருள்வாக்கியின் நினைவாக நினைவகம் ஒன்றை நிர்மாணிக்கலாம். இவ் ஏற்பாடு எதிர்காலத்தில் தொல்பொருள் பொக்கிஷமாக மாறலாம்.

**‘கங்காணி உங்காணி**
**வெங்காணியாகட்டும்’**

என்று கூறிவிட்டு அவர் ஊரைவிட்டுச் சென்று விட்டாராம். நினைக்கையில் பேரப்பிள்ளை எனக்கு விழிகள் கசிவெடுக்கின்றன.

அருள்வாக்கி ஓர் அட்டவதானி. எட்டுத் திட்கையும் பார்க்கக் கூடியவர்.

**அருள்வாக்கியின் பேரப்பிள்ளை**
மர்லியா பரீல்

## புலவரின் சிறப்பு பெயர்களும் அவற்றினை வழங்கியவர்களும்

| | |
|---|---|
| **அப்துல் காதிர் நாவலர்** | ஒக்கூர் முத்துசவாதுப் புலவர் |
| **வித்துவ சிரோன்மணி** | தாராபுரம் ந.மு. அப்துல் கரீம் புலவர் |
| **திவ்ய கவி நாவலர்** | மதுரகவி நாவலரும் வித்துவ சிரோன்மணியுமான முத்துபாவாப் புலவர் |
| **கீர்த்திப்பாவல்லோன்** | நாகூர் தலைமைப் புலமை, தவ செவத்தமரைக்காய சீயர் |
| உலக தீபம் | குலாம் காதிரு நாவலர் |
| **முத்தமிழ்ச் சிங்கம்** | திராவிட வித்துவான், அபூபக்ர் நெய்னார் பாவலர் |
| **கலை வல்லோன்** | அப்துல் மஜீதுப் புலவர் |
| **கல்விக் கடல்** | சித்திரத்தினக் கவிராஜர் |
| **கலைமுனி** | சிவசங்கை ராஜ சமஸ்தான வித்துவான், பொன்னுசாமி கவிராஜர் |
| **வித்துவ தீபம்** | யாழ்பாணத்து அசனா லெப்பை புலவர் |

# மலையகம் தந்த தேச பக்தரை முத்திரை வெளியிட்டு கௌரவிக்க வேண்டும்

தமிழ் இலக்கியப் பரப்பில் பண்தொட்டு இன்று வரை இலக்கியவாதிகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்கு இடமில்லை. அது இலங்கையாக, அல்லது இந்தியாவாக அல்லது மலேசியாவாகவோ இருக்கலாம்.

எழுந்தமானமாகக் கவிபாடி மக்கள் மனதை வென்றதோடு மட்டுமல்லாது தாம் வாழ்ந்த சமூகப் பின்புலங்களைக் கவியறையில் கருத்தாக்கம் செய்வதில் அமரர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் பங்களிப்பும் சிலாகித்துக் கூறத்தக்கதல்லவே.

தமிழ் இலக்கிய தேடலில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த புலவர்களுக்கும் பண்டித பரம்பரையினருக்கும் நிகராக மலையகத்திலும் விரல் விட்டெண்ணத்தக்க ஓரிருவரேனும் வரலாற்றில் தடம்பதித்தே இருக்கின்றனர். அவர்கள் பற்றிய தேடலை மேற்கொள்வதிலும் அதனை வெளிப்படுத்துவதில் ஏனோ தானோ என்ற ரீதியில் நம் சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் கல்வியாளர்களின் நிலையுள்ளது. மாபெரும் பேராதனை பல்கலைக்கழகத்தையே எமதருகில் வைத்துக்கொண்டு தூங்குகின்ற சமூகமாகவும், ஊமைகளாகவும், மௌனிகளாகவும் ஏன் இருக்க வேண்டுமென கேட்கவேண்டியுள்ளது.

இன்றைக்கு 42 வருடங்களுக்கு முன்னர் நான் "தினகரன்" ஆசிரியர் பீடத்தில் – லேக்ஹவுஸில் பணியாற்றியபோது– இலைமறையாக மறைந்து வாழ்ந்த இலக்கிய வாதிகளை வெளிக்கொணர்வதில் "இதயகோலங்கள்" என்ற இலக்கியப் பகுதியையும் நடத்தினேன். அதன் மூலம் செழுமை பெற்றோர் பலர் இருப்பர். இதன் தொடராகவே அக்காலப்பகுதியிலேயே அருள்வாக்கி அப்துல்காதிர் புலவருக்கு அஞ்சல் திணைக்களத்தினால் நினைவு முத்திரை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தேன். அதேவேளை, தமிழ்மொழி அமுலாக்கல், இந்துக்கலாசார அமைச்சராக இருந்த மட்டக்களப்பை சேர்ந்த சொல்லின் செல்வர் செல்லையா இராஜதுரையுடன் சந்தர்ப்பம் கிட்டிய வேளை இது பற்றி கலந்துரையாடினேன். எனது கோரிக்கையை மேலும் வலுப்படுத்தும் நோக்குடனேயே 1979 செப்டம்பர் 20ம் திகதி அருள்வாக்கி அப்துல்காதிர் புலவர் பற்றிய கட்டுரையை வெளியிட்டு அதற்குரிய விதையைத் தூவினேன். சுமார் 4 தசாப்தங்கள் (42 வருடங்கள்) கடந்தும் இதனை எம் சமூகத்தால் நிறைவேற்ற முடியாமல் போனதையிட்டு வெட்கப்பட வேண்டியுள்ளது.

காலம் கடந்தபோதும் இதயத்தின் அடித்தளத்தில் புதையுண்டுக் கிடந்த உணர்வுகள் மீண்டும் உயிர் பெறத்தொடங்கியது. கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான தபால் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் அவர்களுடைய காலத்தில் கண்டி பிரதான தபாற் கந்தோரில்

உதவி தபால் அதிபராகப் பணியாற்றிய திரு யூ.ஜி.எஸ் விஜேசேன அவர்களுடன் கலந்துரையாடினேன். அவர் உடனேயே கொழும்பு அஞ்சல் தலைமையகத்துடன் அதாவது முத்திரை வெளியீட்டுப் பணியகத்துடன் இது விடயத்தை தொலைபேசி மூலம் கலந்துரையாடினார்.

முத்திரை வெளியீட்டுக்குத் தகுதியான பிரமுகர்களின் பட்டியலில் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் பெயர் இடம்பெற்றிருப்பதாகவும் இது பற்றி விழிப்புடன் இயங்கக்கூடிய சமூக இயக்கங்கள் கரிசனை எடுத்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அமரர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் நினைவு முத்திரையை வெளியிட முடியும் என்ற சாதகமான பதில் கிடைக்கப் பெற்றது. விழிப்புணர்வுடன் கூடிய இயக்கங்களை தேடினேன். எதுவும் கைகூடவில்லை.

நினைவு முத்திரை வெளியீட்டின் போது அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கின்ற முக்கியத்துவம் இலக்கியவாதிகளுக்கு கிடைக்காமல் போகின்றமை வேதனைக்குரியதே. கண்டியை சேர்ந்த வழக்கறிஞர் எம்.சி. சித்திலெப்பை (1838–1898) அவர்களுக்கு அரசியல்வாதிகள் பட்டியல் சேர்க்கப்பட்டு நினைவுமுத்திரை வெளியிடப்பட்டமை மனங்கொள்ளத்தக்கது. ஆனால் அவர் காலத்திலேயே பிரபல்யம் பெற்றிருந்த இளைஞரான அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் இலக்கியப் பங்களிப்புக்குரிய கௌரவம் இற்றைவரை அரசினால் கிடைக்கப் பெறவில்லை.

அமரர் அருள்வாக்கி அப்துல்காதிர் புலவரின் பிறந்த இடமான தெல்தோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அல்லா பிச்சை (பொலிஸ் உளவுச்சேவை) அதிகாரி பற்றியும் தினகரன் வாரமஞ்சரிகளில் வெளியான எனது கட்டுரைகளில் இலக்கிய பங்களிப்புப் பற்றியும் பிரஸ்தாபித்திருப்பதையும் இவ்விடத்தில் நினைவு கூறிக்கொள்கிறேன்.

அமரர் அருள்வாக்கி அப்துல்காதிர் பற்றிய மனப்பதிவுகளை வெளிக்கொணரும் உங்கள் இயக்கத்தின் பணிகளுக்கு நெஞ்சம் நிறைந்த என் வாழ்த்துக்களை வழங்குகிறேன். நன்றி

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

**எம்.ஐ.எம் முஸாதிக்**
சிரேஷ்ட ஊடகவியலாளர்

---

(அமரர் அருள்வாக்கி அப்துல்காதிர் புலவரின் பிறந்த இடமான தெல்தோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அல்லா பிச்சை (பொலிஸ் உளவுச்சேவை) அதிகாரி பற்றியும் தினகரன் வாரமஞ்சரிகளில் வெளியான எனது கட்டுரை)

---

# அருள்வாக்கியினுடைய ‘சந்தத்திருப்புகழ்’ பாடல்கள் அனைத்தும் விரிவுரை எழுதப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

வித்துவதீபம் அருள்வாக்கி அப்துல் காதிர் அவர்களது நினைவு விழா ஆண்டு தோறும் ஏதோ ஒரு வகையில் நடைபெற்று வருவதை இட்டு மகிழ்ச்சி அடைகிறோம். பாராட்டுக்கள்.

புலவருடைய ஆக்கங்கள் 40க்கு மேல். ஆனாலும், அவைகளில் அதிகமானவைகள் இன்றும் நூல் உருவாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. அவைகளில் சில ஆண்டு தோறும் வெளிவந்தால் பல வகையிலும் நன்மை பயக்கும்.

அருள்வாக்கியினுடைய ஆக்கங்களின் பிரசித்தமானது “சங்கத்திருப்புகழ்”. இது காசிம் புலவர் அவர்களுடைய திருப்புகழுக்குச் சமமானது. திருப்புகழ் படிப்பதற்கே கஷ்டமானது. அப்பாடல்களின் உள் கருத்துக்களைத் தெரிந்து கொள்வது அதைவிடக் கஷ்டமானது. ஆகையினால் அருள்வாக்கியினுடைய ‘சந்தத்திருப்புகழ்’ பாடல்கள் அனைத்தும் விரிவுரை எழுதப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

திருப்புகள் உரை எழுதப்பட்டு வெளியிடப்படாதவிடத்து இன்றைய புத்திஜீவிகள் உட்பட அதிகமானவர்கள் அதன் பெயரை மட்டுமே உச்சரிப்பார்களே தவிர அதன் ஆரம்பத்தையும், பெறுமதியையும், அது கூறும் உள்ளார்ந்த வரலாற்றையும் அறியமுடியாமலே போகலாம். ஆகவே, பெறுமதியான சந்தத்திருப்புகழை உரையுடன் வெளியிட ஆவணசெய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

**சாந்தி முஹியத்தீன். ஜே.பி,**
கலாபுஷணம், கலை இலக்கிய காவலர்

மலையகம் தந்த தேச பக்தர்

# அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்க வேண்டும்

(வீரகேசரி நிருபர்)

எம்.ஐ.எம். முசாதிக்

## அருட்கொடை

## படைப்பாளி

## தேசபக்தர்

## அமைச்சர்களின் ஆசி

## சாதனைவாதிகள் யார்?

## மறைவு

## முத்திரை வெளியிடுக



# 07

# சுவடிகள்

# அருள்வாக்கி வாழ்த்துப் பதிகம்

(30.08.1965இல் எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் நடைபெற்ற அருள்வாக்கி நூற்றாண்டு விழாவில் மர்ஹூம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் அவர்கள் தாம் இயற்றிய அருள்வாக்கி வாழ்த்துப் பதிகம் என்ற பின்வரும் கவிதையை இசைத்தார். 1968இல் தமிழ் நாட்டுச் சஞ்சிகை ஒன்றில் 'அருள்வாக்கி அமுதம்' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட ஆக்கம் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பெருமானின் ஆக்கங்கள் பற்றியது. ஜே.எம். எம். அப்துல் காதிர் அவர்கள் எழுதிய நீண்ட ஆய்வுக் கட்டுரை, அன்னாரின் பல்வேறு இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய, 2000ஆம் ஆண்டு பதிவேறிய 'இலக்கிய இன்பம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.)

01. சீர்ம லர்ந்தொளிர் செய்யவர் சார்தரு
செய்ய நற்சபை சேர்தரு சீலரே
ஏர்ம லர்ந்திடு மிச்சபை மீதிலே
எம்மை யுஞ்சில செப்பிட வேவலால்
கார்ந் லந்திகழ் கண்டிநன் னாட்டிலே
கவின்வ ளர்ந்திட வோங்கிய காவலன்
பார்பு கழ்ந்திடு பண்புடைப் பாவலன்
பத்தி நீடருள் வாக்கியை வாழ்த்துமே.

02. அந்த மற்றவ னாதியு மற்றவன்
ஆய பேரொளி யாகிய தூயவன்
பந்த நீங்கிய பத்தியி னார்மனப்
பங்க யாசன மேவிய பண்பினோன்
சொந்த நல்லருள் தூவிடு மாறடைக்
கலத்தின் மாலையு மாய்ந்தருள் சோதியைச்
சிந்து திந்தமிழ்ச் செந்தரு வாய்வரு
சீய னாமருள் வாக்கியை வாழ்த்துமே.

03. கந்த மான்மதங் காவதம் வீசிடு.

காந்தி மேனியி னாயக நன்னபி

முந்து தாள்களின் மீதுறு காதலால்

மொண்டு  நீர்சொரி மாமுகில் போலவே

சந்த மார்திருப் பேர்புகழ் சாற்றிய

சாந்த சற்குணச் சுந்தர ஞானியை

எந்த மாதவ மானவ னாய்வரு

மேந்த லாமருள் வாக்கியை வாழ்த்துமே.

04. அந்த நாயகர் மீதினின் மேலுமே

ஆழ்ந்த காதலி னார்தமிழ் மாலைகள்

சிந்து வெண்புகழ் செப்பிடு மாமுனா

ஜாத்து மாலைகள் வண்ணநல் வாழ்த்துகள்

தந்து தண்டமிழ் வாக்கினி லேயருள்

தாங்கு மாபகு தாதினி னாயகர்

நந்து சீரடி நாவினிற் றாங்கினேன்

நாய கன்னருள் வாக்கியை வாழ்த்துமே.

05.ஞான வண்புகழ் நல்லொலி மார்க்கெலாம்

நாய கப்பெரு நாதரென் றோங்கியே

மோன சற்குரு வாகியென் நாவிலே

முந்து செந்தமிழ் தந்தருள் மாதவர்

தீனி னுக்குயிர் சேர்க்குமு கிய்யித்தீன்

செம்மல் மீதுயிர் வண்ணநற் பாமலர்

ஆன னம்மல ரச்செயந் தாதிநூல்

ஆக்கு நல்லருள் வாக்கியை வாழ்த்துமே.

6. தேம லர்ப்பொழில் தீங்கனிச் சோலைகள்

தேங்கு நன்னறைத் தேன்சொரி மாமலை

நாம நல்லிசை யோங்கியே நாடெலாம்

நல்கு செல்வந லந்திகழ் கண்டிமா

நாம நன்னகர் மீதொளிர் தீபமாய்

நலமெ லாமருள் நாதர்ஷி ஹாபுதீன்

வாம மாதவர் மீதருண் மாமணி

மாலை யும்மருள் வாக்கியை வாழ்த்துமே.

7. கண்டி மாதவர் மீதுக லம்பகம்

காட்சி வேண்டுமந் தாதியி னோடுயர்

தொண்டி னுக்கருள் தூயவ ராய்வரு

தோன்ற லாமொலி மார்கள்க ணக்கிலர்

கண்டி தத்தொடு கட்கடை நல்கிடக்

கானு மன்பொடு காட்சியு நல்கிட

அண்டி வேண்டுவ ரந்தரு நூல்பல

ஆக்கு நல்லருள் வாக்கியை வாழ்த்துமே.

8. பத்தி மேவிய சித்திர புஞ்சபு

ராண மும்பதி காதிய மஞ்சரி

சித்தி மேவிய சீருறு கும்மிகள்

சேர்ந்தி லங்குபிள் ளைத்தமிழ் நூல்பல

வித்தி யாண்டொரு நூறின்முன் தோன்றியே

வீங்கு தண்புகழ் விண்ணினு நாட்டவே

முத்தி மேவிய தேசிக மாணியை

மோன நீடருள் வாக்கியை வாழ்த்துமே

9. ஈழ மாந்தரை மீதினின் மட்டுமோ

ஏய்ந்த செந்தமிழ் நாட்டினுந் தன்புகழ்

ஆழ மாகவே தேக்கிடு பார்த்திபன்

ஆகு நாவலன் தண்புகழ் வாயினால்

நீள மாயுரை செய்வது போதுமோ

நீணி லத்தவன் யாத்தருள் நூல்களை

மீள வுந்திகழ் அச்சினிற் கோத்துமே

மேவு தண்ணருள் வாக்கியை வாழ்த்துமே.

10. தொன்று தோன்றிய தண்டமிழ் மாமுனி

தோற்க நற்றமிழ் பாடினோ னென்றவன்

நின்ற நற்புகழ் பாடியே வாழ்த்தினர்

நேய நற்றமிழ் வாணர்க ளந்தநாள்

நன்று நீடவன் ஞாபக நாட்டவே

நாடி யேயொரு நல்வழி காண்குவோம்

என்று முள்ளவன் இன்னருள் அன்னவற்(கு)

ஈய நாமருள் வாக்கியை வாழ்த்துமே

ஜே.எம்.எம். அப்துல் காதிர்



# 1998ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி உடத்தளவின்னை ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுக் கவியரங்கில் பாடிய கவிதை

மலையகம் ஈன்றெடுத்த மாபெரும் மேதை அவர்
மாண்புமிகு அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்
பாட்டாலே விளக்கேற்றி பாட்டாலே அதையணைத்து
நாவன்மை காட்டியவர்
தீபசித்தி செய்து தீபமாய் சுடர் விட்டவர்
அவர் மலையக தமிழ் இலக்கிய முன்னோடி
அவர் பின்னோடி நாம் இங்கு கவியரங்கு நடத்திட அருள்பாலித்த
அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்

பாரதி போல் பக்கத்து நாட்டவன் அல்ல அருள்வாக்கி,
நம்ம வீட்டு பிள்ளை அவர்
ஒரு வகையில் எனக்கு உறவினர்
ஆமாம் அவரின் அன்பு பேரன் மர்ஹூம் அல்லா பிச்சை மணம்புரிந்தது எனது
ஒன்று விட்ட சகோதரி ஸைனப் பீபீயை
மணந்ததாலே மைத்துனரானார் மர்ஹூம் அல்லா பிச்சை
அதனால் எங்களுக்கும் அப்பாவானார் அருள்வாக்கி,
அப்பாவுக்கு பேரப்பிள்ளைகள் அன்புடன் செலுத்தும் காணிக்கையே இந்த
கவியரங்கு
இன்றைய கவியரங்கில் தலைப்பு வசந்தமே வா

இன்றைய விழாவின் நாயகனாம் ஞானவெண்பாப்புலி
கவிராஜசேகரன், பிரபந்த ரத்னாகரம்,
சமூக வித்துவான், செந்தமிழ் புலவர்,
கலைமுனி, நாவலர், மதுரகவி, காந்தக்கவிராயர் என
பல பட்டங்களை பெற்ற வித்துவ தீபம்

மெய்ஞான அருள்வாக்கி அப்துல்காதிர் புலவரின்
பாமாலை வரிகளுடன் நான்
தொடுத்த பூமாலையை பூர்த்தி செய்கின்றேன்,

பொல்லாத தீதனென்றே எல்லோருமெனை புறக்கணித்து
சொல்லாத மாவசைகள் சொல்லினும் கொல்லினும் சோர்வு படேன்

– தளவின்னை ஷிபார்

---

(குறிப்பு: குறித்த கவிதையில் புலவர் பற்றி குறிப்பிடப்படும் பகுதி மாத்திரமே
கவிஞரின் அனுமதியுடன் இங்கு பதிவிடப்பட்டுள்ளது)

*கவிபாடி விளக்கெரித்தல்*

*எரிவாய் விரிந்தெழுந்து எண்ணெய் மேல்*
*தோய்ந்து*

*கரிவாய் இருள்போக்கி காட்ட – அரியணையின்*

*தூண்டா விளக்கே சுடர்விட்டு நீயென்முன்*

*ஈண்டிங் கெழுந்து எரி*

## ORGANIZING COMMITTEE

01. **A.M.MIHLAR -** Vice Principal, Zahira College, Colombo – 10
02. **C.M.M.ZUBAIR** – President, Deltota Media Foundation and Producer at Sri Lanka Broadcasting Corporation (SLBC)
03. **I.M.JAMEEL -** I.S.A Kandy Education Zone
04. **I.M.NIZAM -** I.S.A Kandy Education Zone
05. **A.G.M.THAMEEM -** Principal, K/Siddi Lebbe College.
06. **A.H.NASEERA -** Teacher
07. **A.C.M. NADEER -** Teacher - Editor- Vaiharai life style magazine
08. **A.A.M ZULFIKAR ALI -** Project Officer, AMYS, Colombo 10
09. **S.N.M.SUHAIL -** Senior Sub Editor, Vidivelli
10. **M. RIZAN RANZI -** News Reader and News Producer Capital Tv
11. **T.N.ISRA -** Assistant Lecturer, NIE
12. **S.A.M. FAWAZ**- Information Officer - Department of Government Information
13. **M.M.F. FASRIYA -** Teacher
14. **JALALDEEN MALIK -** MBA - Chief Operating Officer - Ramya Lanka
15. **M.Y.RIYAS MOHAMMED -** Secretary, Idayaththalam Art Literary Circle
16. **J.M.ALI -** Digital Content Management Executive - ACJU
17. **A.J.KASHIFA FARWIN -** University Student
18. **M.N.F. SHARMILA -** University Student
19. **M.A.M. AJMAL -** University Student
20. **M.I.M. HAREES -** Designer
21. **FAHMY HALEEMDEEN -**
    Author , Poet, Director- Thamil manram ,
    Co-author - Vettai weakly e-magazine.
22. **I.M. YAKOOB-** Teacher
23. **A.R.M. MUSAMMIL -** Teacher
24. **RUSTHA BIN JAWRIYA -** University Student
25. **K.K.F NADHA** - Assistant Lecturer, University of Peradeniya.